|| श्रीः ||

# || श्रीकामकोटिप्रदीपः ||

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

மலர் 13 சோபகிருது ஹூ மாசி – பங்குனி மீ மார்ச் 2024 இதழ் 3



ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சார்பில் வெளியிடுவோர் :
ஸ்ரீ காமகோடி கோஶஸ்தானம்



# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்

## மாசி - பங்குனி 2024

மலர் 13 மார்ச் 2024 இதழ் 3

### பொருளடக்கம்


ப்ரார்த்தனை 3

ஆசிரியர் பக்கம் 5

தெய்வத்தின் குரல் 8

பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

நீதிக் கதைகள் 11

பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

அனுக்கிரஹ பாஷணம் 17

பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸங்கராசார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீஸதாசிவ ப்ரம்மேந்திரரின் கீர்த்தனைகள் 23

ராஜ தரங்கிணி 24

பிற்காலத்துத் தமிழ் நூல்களில் அத்வைதம் 26

முகாம் நிகழ்ச்சிகள் 28

பங்குனி மாத விசேஷ தினங்கள் 33

அத்வைத ஆசார்ய பரம்பரை 34

ப்ரபோத சிந்தாமணி 38

சாணக்ய ஸுபாஷிதம் 39

மஹா பெரியவாளின் நினைவு மஞ்சரி 41

வேதாந்த ஸம்வத்ஸரம் 43

மகாபாரத சுருக்கம் 44

முக ஸாரம் 47






भाग्योदयेन बहुजन्मसमार्जितेन सत्संगमं च लभते पुरुषो यदा वै।
अज्ञानहेतुकृतमोहमदान्धकारनाशं विधाय च सदोदयते विवेकः।।

Man obtains the contact of saints only when the merits earned by him through many births ripen. Wisdom dawns in the wake of such contact dispersing the darkness of infatuation and arrogance which have their root in ignorance.


நிர்வாகக் குழு

ஸ்ரீ K. ஐயராமகிருஷ்ணன்

டாக்டர் வெங்குடி B. ரிஷிகேசன்

# ஸ்ரீ காமகோடி ப்ரதீபம்


கௌரவ தலைமை ஆசிரியர் :

டாக்டர் S. மணி திராவிட் சாஸ்த்ரி

ஆசிரியர் குழு :

பேராசிரியர் N.வீழிநாதன்

டாக்டர் R.கிருஷ்ணமூர்த்தி சாஸ்த்ரிகள்

ஸ்ரீ T.N. ராமசந்திரன்

ஸ்ரீ T.S. ராகவன்

பேராசிரியர் விஷ்ணுபோத்தி V.S.

ப்ரஹ்மஸ்ரீ ஸ்ரீரமண சர்மா



வெளியிடுவோர் :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடத்தின் சார்பில்
ஸ்ரீகாமகோடி கோசஸ்தானம்

அலுவலக முகவரி :

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடம்
நெ.1.சாலைத்தெரு,
காஞ்சீபுரம் - 631502.
தொலைபேசி : 044 - 27233115

மின் அஞ்சல் :
kamakotipradeepam@gmail.com


### சந்தா விவரம்

| | |
|---|---|
| ஒரு இதழ் | ரூ. 20/- |
| ஒரு வருடத்திற்கு | ரூ. 220/- |
| மூன்று வருடங்களுக்கு | ரூ. 600/- |
| ஐந்து வருடங்களுக்கு | ரூ. 1000/- |
| ஆயுள் சந்தா | ரூ. 5000/- |
| புரவலர் | ரூ. 10000/- |


Published by : Sri Kamakoti Kosasthanam on behalf of
Sri Kanchi Kamakoti Peetam,
No1, Salai Street, Kancheepuram - 631502.
Ph : 044 - 27233115.

Periodicity : Monthly.

Printed at : Jai Ganesh Offset, Chennai.



श्रुतिशिखरसमुत्थस्तत्त्वसंवित्प्रकाशः कलितिमिरनिवृत्त्यै कल्पमानश्चकास्तु।
शिवगुरुसुतमार्गं दीपयन् चन्द्रमौलेः शिशिरकरुणया श्रीकामकोटिप्रदीपः।।
कामकोटिप्रदीपोऽयं सतां विभ्राजतां गृहे।
यत्प्रकाशलवात्सद्यः पापध्वान्तो हतो भवेत्।।

# ப்ரார்த்தனை
# प्रार्थना

*ஸோமனே உனது அறிவாலும் அனுக்ரஹத்தாலும் நாங்கள் நீண்ட காலம் ஸூர்யனைக் காண்போமாக. எம்மை மேம்படுத்தவும். ஸோமனே இரு உலகங்களின் நிதியை எமக்கு அளிக்கவும், எம்மை மேம்படுத்தவும்.*

*உன்னை யாரும் வெல்ல முடியாது சோமனே ! சத்ரு நாசகனே எமக்குத் தனம் தந்தருள், எம்மை மேம்படுத்து. பவமான ஸோமனே அறிஞர்கள் வேள்விகளால் உன்னைப் போற்றுகிறார்கள். எம்மை மேம்படுத்தவும்.*

*பவமான ஸோமனே! எம் ஜீவனத்தை உஜ்ஜீவிக்கவும், அஸ்வ தனத்தை*
*எமக்கு அளிக்கவும். எம்மை மேம்படுத்தவும்.*

*[ரிக் வேதம் 9 ஆம் மண்டலம்]*

***ஸாபரதோஸ்மி சரணம் ப்ராப்தஸ்த்வாம் ஜகதம்பிகே***
***இதானீம் அனுகம்ப்யோஹம் யதேச்சஸி ததா குரு ।। 5***

*ஜகதம்பிகே நான் அபராதி. ஆயினும் தங்களை சரணடைந்து விட்டேன். இப்போது நான் உங்களால் தயை செய்யத்தகுந்தவன் . எப்படித் தோன்றுகிறதோ அப்படிச் செய்யுங்கள்.*

***அஞ்க்யானாத் விஸ்ம்ருதே: ப்ராந்த்யா யன் ந்யூனமதிகம் க்ருதம்***
***தத் ஸர்வம் க்ஷம்யதாம் தேவி ப்ரஸீத பரமேஸ்வரீ ।। 6***

*பரமேஸ்வரி அறியாமையாலோ, மறதியாலோ குறைவாகவோ அதிகமாகவோ நான் பூஜைகளைச் செய்திருக்கலாம். அவை யாவையும் பொறுத்துக் கொள்ளுங்கள். அருள் புரியுங்கள்.*

***காமேஸ்வரீ ஜகன் மாத:ஸச்சிதானந்த விக்ரஹே***
***க்ருஹாண அர்ச்சாமிமம் ப்ரீத்யா ப்ரசீத பரமேஸ்வரீ ।। 7***

*சச்சிதானந்த வடிவே பரமேஸ்வரீ நான் செய்யும் இந்த பூஜையை ஏற்றுக் கொள்ள வேண்டும் . அருள் புரிய வேண்டும்.*

*குஹ்யாதி குஹ்ய கோப்த்ரீ த்வம் க்ருஹாண அஸ்மத் க்ருத ஜபம்*
*ஸித்திர் பவது மே தேவி த்வத் ப்ரஸாதாத் பரமேஸ்வரி ।। 8*

*மிக ரகஸ்யமான மந்த்ரங்களை நீங்கள் பாதுகாக்கிறீர்கள். நான் செய்யும் ஜபத்தை எற்றுக் கொண்டு மந்த்ர ஸித்தியை எனக்கு அருள வேண்டும்.*

*[தேவி க்ஷமாபன ஸ்தோத்ரம்]*


**வேத ரக்ஷண நிதிக்கு பணம் அனுப்ப வேண்டிய தகவல்கள்**

**VEDA RAKSHANA NIDHI TRUST**

**ICICI Bank** : T. Nagar, Chennai 17, A/C. No. 602 601205 431
**IFSC Code** : ICIC 0006026

**Bank of Baroda** A/C No : 05320100002089 IFSC CODE barb0chenbs

**Indian Bank :** West Mambalam Branch A/C. No. 418622532 IFSC IDIB 000w005

**Canara Bank :** West Mambalam Branch A/C No. 0917101041732

IFSC CNRB 0002616

**Indian Bank** : Mutt Branch, Kancheepuram
A/C No. 411552514 IFSC IDIB b0005085

பண உதவி செய்பவர்கள் எவ்வளவு தொகை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
செலுத்துபவர் அவருடைய PAN No ஐயும், கோத்ரம், நக்ஷத்ரம்,
செல் போன் எண் முதலியவைகளை ட்ரஸ்டுக்குத் தெரிவிக்கவும்.

வேத ரக்ஷண நிதிக்குப் பணம் அனுப்புவர்கள் விவரத்தை கீழ்கண்ட
இ. மெயிலுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

Vrnt e.mail : office@vrnt.org <mailto:office@vrnt.org> Phone : 24740549

# ஆசிரியர் பக்கம்

## *மறைக்கப்பட்ட காஞ்சீ மடத்தின் பங்கு*

*ஸப்தபுரிகளில் ஒன்றான அயோத்தியில் ஸ்ரீ ராமனுக்கு கோவில் எழுப்பப்பட்டு கோலாஹலமாக வைபவம் நடைபெற்றது. மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி. 500 ஆண்டுகளாக நடந்த போராட்டம் பற்றி பல பேர் பேசினார்கள். வட இந்திய மீடியாக்கள் பேசின. ஆஹா ஊஹு என்று கோஷமிட்டனர். ஆனால் இந்த அயோத்தி கோவில் தொடர்பாக நமது மட ஆசார்யர்கள் பங்களிப்புப் பற்றி யாரும் பேசவில்லை.*

*அதுவும் ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் முயற்சி, பங்களிப்பு பாராட்டப் பட வேண்டியவை. 'ஒரு சரித்திரம் எழுதும்போது இல்லாத ஒன்றைக் கூட மிகைப்படுத்தி எழுதலாம். தவறில்லை. ஆனால் அதே சரித்திரத்தில் நடந்த முக்யமான நிகழ்ச்சியை மறைக்கக் கூடாது' என்று மகாபெரியவா சங்கர சரிதத்தில் கூறுவார். நமது ஆசார்யர்கள் மூவரும் எப்படி இதில் ஸம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்று பார்ப்போம்.*

*முதலாவதாக தசரதர் அன்னை காமாக்ஷியை வழிபட்டு பின் அஸ்வமேத யாகம் செய்து தாசரதிகளைப் பெற்றார் என்பது ஐதீஹம். சைவத்தில் காஞ்சீபுரம் எப்படி பரிகாரத் தலமாகுமோ அப்படியே சாக்தத்தில் அயோத்தி பரிகாரத் தலமாகும்.*

*மகா பெரியவா காஞ்சியிலிருந்து ஸ்ரீ ராமசந்தரமூர்த்திக்கு வெண்குடையும் இரண்டு சாமரங்களையும் அயோத்திக்கு அனுப்பி வைத்தார்.*

### *புதுப்பெரியவாளின் பங்கு*

*1986ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள் அயோத்திக்குச் சென்று விசேஷ பூஜைகள் செய்தார். மகா பெரியவா அளித்த சாமரங்களையும் குடையையும் அயோத்தியில் ஸமர்ப்பித்தார். 1989ஆம் ஆண்டு ஸ்ரீ ராம் என்று பொறிக்கப்பட்ட செங்கற்களை விஸ்வ ஹிந்து பரிஷத்திடம் அளித்தார். பல விதமான அரசியல்*

*வாதிகளுடன் அவ்வப்போது பேச்சு வார்த்தை நடத்தி வந்தார். பல விதமான கோஷ்டிகள் இயங்கி வந்த நிலையில் அந்தந்த கோஷ்டிகளுடன் தனித் தனியாகவும் சேர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்தி வந்தார். அனேகமாக எல்லோரும் ஒப்புக் கொள்ளக் கூடிய நிலையை உருவாக்கினார்.*

*அத்வானி, அசோக் சிங்கல், வாஜ்பாய், ஜார்ஜ் பெர்னாண்டஸ் இவர்கள் கேட்டுக் கொண்டதன் பேரில் இரு தரப்பினரிடமும் இதமாகப் பேசி அயோத்தியில் கோவில் வருவதை உறுதி செய்தார். கோவில் பூமி பூஜைக்கு நாள் குறிக்கப்பட்டது.*

*அன்று ஆசார்யரின் ஜயந்தியாகவும் அமைந்தது. [அவரது முயற்சி எப்போதோ பலிதமாயிருக்கும். அரசியல் சூழ்ச்சிகளால் நிறைவேறவில்லை.] சற்றும் மனம் தளராமல் விஸ்வ ஹிந்து பரிஷத்துடன் தொடர்பிலிருந்து கொண்டு கட்டுமான பணிக்கு ஆலோசனைகள் வழங்கி வந்தார்.*

### *ஸ்ரீ விஜயேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகளின் பங்கு*

*ஸ்வாமிகள் பூமி பூஜையில் ஸ்தாபனம் செய்வதற்கு கருங்காலி மரத்தில் நவரத்னங்கள் பதித்த ஸங்கையும், இரண்டு செங்கல்களையும் ஐந்து தங்கக் காசுகளையும் தாமரைப் பட்டையத்தையும் அனுப்பி வைத்தார்.*

*2023 ஆம் வருடம் காசியில் தன் சாதுர்மாஸ்யத்தை முடித்துக் கொண்டு சாரதா நவராத்ரியை அயோத்தியில் கொண்டாடினார். ஏகாதசி அன்று ராம் லல்லா சன்னிதிக்கு எழுந்தருளி பூஜை நடத்தினார்.*

*அவருடைய ஆலோசனைப்படியே ப்ராணப் ப்ரதிஷ்டைக்கு நாள் குறிக்கப்பட்டது. வைதிக கார்யங்களுக்கு காசி பண்டிதர் கணேஷ்வர் சாஸ்த்ரி த்ராவிட் என்பவர் நியமிக்கப்பட்டார். காசி லக்ஷ்மீகாந்த் மதுர நாத் தீக்ஷித் தலைமை வகிக்கிறார். இப்படி நமது ஆசார்யர்கள் கோவில் வைபவத்தில் ஸம்பந்தப் பட்டுள்ளனர்.*

*அறியாமையால் சில விஷமப் ப்ரசாரங்கள் நடக்கின்றன. இதைப் படித்தபின் வாசகர்களுக்கும் ஐயங்கள் அகலும் என்று நினைக்கிறோம். இந்த அரிய விஷயத்தை ஸ்ரீமடம் தின மலர் மூலமாக வெளியிட்டதற்கு நமது நன்றி. மூன்று*

*ஆசார்யர்களின் சீரிய பங்கு, ஆசீர்வாதம் இந்த நிகழ்ச்சியை சிறப்பாகச் செயல் பட வைத்தது என்றால் மிகையாகாது. ராம பக்தர்கள் மட்டுமன்றி ஆஸ்தீகர்கள் அனைவர் மனதிலும் ஒரு நிறைவு ஏற்பட்டது. காரணம் நமது ஆசார்ய புருஷர்களின் ஆசீர்வாதமே. இது என்றென்றும் நிலைத்து ராமராஜ்யம் ஏற்படட்டும்.*

*ராமோ விக்ரஹவான் தர்ம: என்ற கூற்றின்படி தர்மத்தின் உருவான ஸ்ரீ ராம சந்த்ர மூர்த்தியின் அருள் அனைவருக்கும் கிடைக்கப் ப்ரார்த்தித்து இவ்விதழை ஸ்ரீ சரணர்களின் பொற்பாதத்தில் ஸமர்ப்பிக்கிறோம்.*

*ஜெய் ஸ்ரீ ராம் ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர*

**சுவை ஒளி ஊறுஓசை நாற்றம்என்று ஐந்தின்**
**வகைதெரிவான் கட்டே உலகு**

*நாவால் அறியப்படும் சுவை, கண்ணால் காணப்படும் காட்சி, தோலால் உணரப்படும் தொடு உணர்ச்சி, காதால் அறியப்படும் ஓசை, மூக்கால் நுகரப்படும் மணம் என வரையறுக்கப்பட்ட ஐம்பொறிகள். ஐம்புலன்கள் ஆகியவற்றின் நுண்மையான தன்மைகளைப் பகுத்தறிந்து உணர்ந்துள்ளவனிடம்தான் உலக் பொருள்களும், உயிர்களும் கட்டுப்பட்டு அடங்கி நிற்கும்.*

*(குறள் : 27)*

*விருப்பு வெறுப்பற்றனவும் ஆத்ம வசப்பட்டனவும் ஆகிய இந்த்ரியங்களால் விஷயங்களில் உலவுகின்ற வேந்தன் மனத்தெளிவடைகிறான்.*

*(ஸ்ரீமத் பகவத்கீதை : 2-64)*


## பிரதீபம் வாசகர்களுக்கு

**சந்தா புதுப்பிக்காதவர்கள் புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்**

# தெய்வத்தின் குரல்

ஜகத்குரு பூஜ்யஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## எல்லா மதங்களின் பிரதிநிதிகளையும் கொண்ட சுதந்திரம் பெற்ற தனியமைப்பு



இதன் தொடர்ச்சியாக, இத்துறையில் ஏனைய துறைகளில் போல அரசாங்கம் தனக்கு ஆலோசனை அளிப்பதற்காகக் குழு நியமிப்பதென்றில்லாமல், தான் அறவே விலகி நின்று மதத்துறை சம்பந்தமான விஷயங்களில் முடிவெடுத்து நடத்த முழு நிர்வாகப் பொறுப்பு பெற்ற, சட்டப்படிப் பூரண அதிகாரம் கொண்டதொரு சுதந்திரமான தனி Autonomous அமைப்பை நிறுவ வேண்டியது அவசியமாகிறது. அதன் சிபாரிசின் மீதே தேவை ஏற்படின் அரசாங்கம் சட்டம் வகுக்கலாம்.

பல மதங்கள் வழங்குகின்ற இந்நாட்டில் அவையனைத்திற்கும் பொதுவான பக்தி, ஆத்ம சிந்தனை, அன்பு, உண்மை, நேர்மை, தொண்டு, பணிவு, ஆகியவற்றை அப் பல மதங்களையும் சார்ந்த எல்லாப் பிரஜைகளுக்கும் வளர்த்துக் கொடுப்பதற்காகத் திட்டங்கள் வகுத்து நடத்தும் பொருட்டு எல்லா மதப் பிரதிநிதிகளும் ஒன்றுகூடிப் பணிபுரிவதே முக்கியமாக இச்சுதந்திர அமைப்பின் நோக்கமாக இருத்தல் வேண்டும். இதுகாறும் பிரிந்து பிரிந்து சண்டையிடுவதாகவே பெரும்பாலும் இருந்து வந்துள்ள எல்லா மதஸ்தரையும், அதே போல் ஒவ்வொரு மதத்திற்குள்ளுமேயுள்ள உட்பிரிவினரையும் அச்சகலருக்கும் பொதுவான மேற்சொன்ன குணநலன்களை வலியுறுத்துவதன் மூலம் இவ்வகண்ட பாரதம் என்ற ஒரே ஐக்கியமான குடும்பத்தினையே சார்ந்த அன்பு அங்கத்தினர்களாகச் செய்யும் பொறுப்பினை ஆற்றுவது இச் சுதந்திர மத அமைப்பின் முக்கியமான பணியாயிருக்க வேண்டும்.

மக்களுக்கு மன மேம்பாடளிப்பதிலும் அரசாங்கத்திற்குப் பங்குண்டு என்பதால் மட்டுமன்றி, ஓர் அரசாங்கம் அமைதியான முறையில் செயற்பட நாட்டின் சகல பிரிவினரும் ஐக்கியமுற்றிருப்பது அத்தியாவசியம் எனும் காரணத்தினாலும் இப்பணிகளுக்கு உதவி புரியும் மேற்படி அமைப்பின் நிதித் தேவை முழுவதையும் அரசாங்கமே ஏற்க வேண்டும்.

மேற்படி அமைப்பில் இடம் பெறத் தக்கவர் யாவர்? தங்களது மத நூல்களைப் பயின்று தேர்ச்சி பெறுவதற்கும், அம்மத அநுஷ்டானங்களை உரியவாறு புரிவதற்குமே வாழ்வை அர்ப்பணித்த பெரியவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும். இந்த யோக்கியதாம்சங்களோடு உலக நடப்புக்களில் பரிசயமுள்ளோராகவும், மக்களோடு நன்கு பழகி அவர்களது மனப்போக்குகளை அறிந்தோராகவும், நடைமுறைக் கண்ணோட்டம் கொண்டோராகவும், நிர்வாக அறிவு பெற்றோராகவும் உள்ளவர்களும் அதில் அங்கம் வகிக்க வேண்டும். இத்தகையோரே இத்துறையில் என்ன செய்ய வேண்டுமோ, எப்படி மக்களை அதில் முன்னேற்ற வேண்டுமோ அவற்றைப் பக்குவமாகச் செய்யவியலும்.

நாட்டிலுள்ள எல்லா மதங்களின் பிரதிநிதிகளாகவும் மேற்சொன்ன தகுதி பெற்றோராக நம்பப்படும் மதத்தலைவர்களுக்கு அங்கத்துவம் அளித்து இச்சுதந்திர மத நிர்வாக அமைப்பு உருவாக்கப் பெற்று இத்துறையின் நேரடிப் பொறுப்பு அதனிடமே ஒப்புவிக்கப்பட வேண்டும். அரசாங்கம் இத்துறையில் நேரடியாகத் தலையிட்டு எந்த மாற்றமும் செய்தல் அறவே கூடாது.

## மதத் தலைவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது

மறு திசையிலும் இதையே கூற விரும்புகிறோம். அதாவது, மதத்தலைவர்களும் அரசாங்க விஷயங்களில் ஒரு நாளும் தலையிடலாகாது. அதற்கான அறிவும், அநுபவமும் பெற்றவர்களின் பொறுப்பில்தான் அரசாங்கம் நடக்க வேண்டும். மனித இயற்கையில் அரசாங்கத்தின் செயற்களமாகிய உலகவியலிலேயே ஈடுபடும்போது அறிவு, அநுபவம் என்பவற்றுக்கு மட்டும் இடம் அளிப்பதாக இன்றி, வேறு சில குறைபாடுகளுக்கும் இடமளிக்க ஏது ஏற்படுகிறது. ஆன்மவியல், உலகியல் என்பவை போல், அரசியல் என்றே உருவாகியிருக்கும் ஒன்றிலோ அதிகாரம், பதவி, புகழ் என்ற வசீகரண அம்சங்களின் கலப்பு அதிகமிருப்பதால், தர்ம நாட்டம் கொண்ட எவரும் மிக்க

வருத்தமடையும்படியான பல போக்குகள் ஊடுருவ அதிகமாகவே ஏது இருப்பதாகத் தெரிகிறது. எனவே, மக்களை உள்ளவுயர்வில் முன்னேற்றுவதற்குப் பொறுப்புப் பெற்ற மதத் தலைவர்கள் தாங்களே பின்னேற்றம் அடையும் அபாயத்திலிருந்து தங்களைக் காத்துக் கொள்ள வேண்டுமாயின், அரசாங்க சம்பந்தமும், அரசியல் சம்பந்தமும் அறவே கொள்ளாமல் தொலைவில் விலகியே இருக்க வேண்டும்.

மத வளர்ச்சிக்கான போஷணை அளிக்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு நினைவூட்டுவது, அது அவ்வாறு செய்யும்போது உரிய பாராட்டை அளித்து மேலும் உற்சாகப்படுத்துவது, மத விஷயங்களில் அரசாங்கம் பிரவேசித்தால் தைரியமாகக் கண்டிப்பது - ஆகியவற்றுக்கு அதிகமாக மதத்தலைவர்கள் அத்துறையில் சம்பந்தம் கொள்ளவே கூடாது. சுத்தி செய்யும் நீர்நிலையையே துர்நாற்றக் குட்டையாக்குவது போன்ற ஆபத்துக்கும் பாபத்துக்கும் இடம் தருவதான அரசியல் சம்பந்தத்தை மதவியலுக்கு ஒருபோதும் காட்டிக் கொடுக்கலாகாது.

அரசாங்கத்தினர்தான் உலகியல் வளர்ச்சியோடு மத வளர்ச்சியிலும், அதற்கு தாங்கள் அளிக்க வேண்டிய போஷணையை எப்போதும் நினைவு கொண்டிருக்கும் அளவுக்குக் கவனம் கொண்டிருக்க வேண்டுமேயின்றி, மதத்தலைவர்களும் அதே போல் அரசியல் துறையில் கவனம் செலுத்த வேண்டுமென்றில்லை. அவர்களது முழுக்கவனமும் மதம் குறித்ததாகவே இருத்தல் வேண்டும்.

தற்போது சுதந்திரமாகப் புதிய அரசாங்கம் ஏற்படுவதால் அத்துறையினரின் பங்கையே முதற்கண் எடுத்துக் கூறப் புகுந்தோம்.

(தொடரும்)

## வாசகர்களுக்கு ஒரு விண்ணப்பம் :

வேத சாஸ்த்ர புராண, ஸ்தோத்ரங்கள் தொடர்பாக கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. அவைகளை நவம்பர் மாதத்திற்குள் அனுப்பி வைக்கவும். பரீசீலித்து ப்ரசுகரிக்கப்படும். இடையில் திடீரென்று கட்டுரைகளை ப்ரசுகரிக்க நிர்பந்த்திக்க வேண்டாம் என்றும் வேண்டி கேட்டுக் கொள்கின்றோம்.

# நீதிக் கதைகள்

## ஜகத்குரு பூஜ்யஸ்ரீ ஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

# ஆண்டவன் ஏற்றும் ஆத்ம தீபம்

ஆக நம்முடைய பாரம்பரியம் படித்து வருவதை விட, படிக்காவிட்டாலும் ஒரு பாரம்பரியத்தோடு வந்திருக்கிறது.

தாய் தந்தையாரைப் போலத்தான் பிள்ளைகள் வருவார்கள். தாய் தந்தையர் பாதை மாறிப் போனால் பிள்ளைகளும் பாதை மாறிப் போய்விடுவார்கள்.

நாம் கவனித்தாலே அதன்படி வளருவது கஷ்டம். கவனிக்கா விட்டால் கேட்கவே வேண்டாம். அந்த அளவுக்குச் சூழ்நிலைகள் மாறிக்கொண்டே இருக்கிறது. இதையெல்லாம் நம் அறநூல்களும் சொல்லி இருக்கின்றன. இன்றைக்கு விஞ்ஞானம் என்னென்ன கண்டுபிடித்திருக்கிறதோ இவையெல்லாவற்றையும் அன்றைக்கே நம் அறநூல்கள், பழைய விஞ்ஞானங்கள் நிரூபித்திருக்கின்றன.

ஒருகாலத்திலே நமக்கு விஞ்ஞான பூர்வமாகச் செய்வதற்கு வசதிகள் இல்லாததாலும் படிப்புத் திறமைகள் குறைந்து போனதாலும், ஆங்கிலேயர்கள் அதை எடுத்து விஞ்ஞான பூர்வமாக ஆராய்ச்சி செய்து கருவிகளைக் கொண்டு நிரூபித்து விட்டு போனார்கள்.



இன்றைக்கு ஒரு இருதய நோய் சிகிச்சைக்காக ஒரு ஹார்ட் ஸ்பெஷல் ஹாஸ்பிடலை (Heart Special Hospital) மருத்துவமனையைத் திறந்து வைத்தேன்.

ஹார்ட் என்றால் சமஸ்கிருதத்தில் 'இருதயம்' என்று பெயர். இருதயம் என்றால் 'ஹார்ட்' என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள்.

**'ஹ்ருதி அயம் வாத்ததேதி ஹ்ருதயம்'**

எங்கே பரமாத்மா இருக்கிறார் என்றால், அவர் இருதயத்திலே இருக்கிறார் என்று பஜகோவிந்தத்தில் ஆதிசங்கரர் சொல்லுகிறார்.

'இருதயத்திற்குள்ளே, ஆத்மாவிற்குள்ளே, பரமாத்மா இருக்கிறார். அவரை உள்நோக்கிப் பார்' என்று ஆதிசங்கரர் சொல்கிறார்.

அப்பேர்ப்பட்ட இறைவன் இருக்கக் கூடிய இருதயத்தை இன்று எப்படி வைத்துக் கொண்டிருக்கிறோம் என்று நமக்குத் தெரியாது.

பெரியவர்கள் அந்தக் காலத்திலேயே சொல்லியிருக்கிறார்கள். இருதயம் சுத்தமாக இருந்தால்தான் பகவான் வருவார். இல்லாது போனால் வரமாட்டார் என்று அந்தக் காலத்திலேயே சொல்லி விட்டார்கள்.

அசுத்தமாக இருந்தால் இறைவன் இருதயத்திற்குள்ளே வரமாட்டார் என்று உபன்யாசத்திலேயே சொல்லி இருக்கிறார்கள். இது எல்லா சாஸ்திரங்களி லேயும் சொல்லப்பட்டுள்ளது.

இருதயத்திலே என்ன நினைக்கிறோமோ, அந்த பாவனைதான் நமக்கு வரும். நல்லதை நினைத்தால் நல்லது வரும். கெட்டதை நினைத்தால் கெட்டது வரும்.

ஈஸ்வர ஸ்வரூபமும் ஈஸ்வர சக்தியும் அங்கே சூட்சுமமாக இருக்கிறது.

கண்ணாடி மீது அழுக்குப் படிந்து விட்டால், அங்கே பிரதி பிம்பம் தெரியாது. அதுபோல இருதயம் என்ற கண்ணாடி சுத்தமாக இருந்தால்தான் அங்கே ஈஸ்வர ஸ்வரூபம் தெரியும்.

அந்த அழுக்கு என்பது என்ன?

காமம், குரோதம், மதம், மாத்ஸர்யம், லோபம், அகங்காரம், போன்ற தீயகுணங்கள்தான்.

தீய சிந்தனைகள் மனத்திற்குள் வரும்போது அதுவே கனமாகி, அதுவே பாரமாகி, பிறகு வெடித்து, 'ஹார்ட் அட்டாக்' வந்துவிடுகிறது.

டென்ஷன் மூலமாக 'ஹார்ட் அட்டாக்' வருகிறது. நல்ல இருதயம் என்றால் 'குட் ஹார்ட்' என்பார்கள்.

இந்த நல்ல இருதயம் யாருக்கு இருக்கிறது? எல்லோருமே குழப்பமாகத்தான் இருக்கிறார்கள். யாருக்கு வெளுத்த இருதயம் என்று யாருக்குமே தெரியவில்லை. வெளுத்த இதயம் உள்ளவர் ஒரே ஒருவர்தான்- அவர்தான் ஆஞ்சநேயர் ஸ்வாமி.

அவர் இருதயத்திலே காம, குரோத, லோப, மத மாத்ஸர்யம் அகங்காரம் எதுவும் இல்லை. அவருக்குத் தான் 'குட் ஹார்ட்' இருந்தது.

இராமாயணத்திலே ஆஞ்சநேயர், 'இராவண சபைக்கு' சீதை இருக்கிறாளா என்று பார்க்கப் போகிறார். அங்கு இருந்த அலங்கோலங்களை எல்லாம் இராமாயணம் வர்ணிக்கிறது.

அத்தனை அலங்கோலங்களையும் பார்த்துச் சலனம் அடையாத ஆஞ்சநேயர், பரிசுத்தமாகத் திரும்ப வந்தார். அதை மிகப்பெரிய வெற்றி என்று கூறுகிறது இராமாயணம்.

எந்தவிதத் துர்குணமும் மனத்தில் படியாமல் சுத்தமாக இருந்தவர் ஆஞ்சநேயர். அதனால்தான் அவருக்குச் சுத்தமான இருதயம் இருந்தது. அப்படிப் பட்ட 'குட் ஹார்ட்' கொண்டிருந்தவர் ஆஞ்சநேயர்.

அவருடைய இருதயத்தைத் திறந்து பார்த்தால் அங்கே, இராமர்தான் உட்கார்ந்து கொண்டு இருக்கிறார். அந்த குட் ஹார்ட்டிற்குத்தான் பகவான் வருகிறார். ஆஞ்சநேயர் இருதயத்தை திறந்து பார்த்தாலும் இராமர் இருப்பார்.

நம்முடைய இருதயத்தை அறுவை சிகிச்சை செய்து திறந்து பார்த்தால் அங்கே என்ன இருக்கும்? அது அவரவர்களுக்குத் தெரியும்.

இருதயம் சுத்தமாக இருந்தால்தான் வாழ்க்கை நடத்த முடியும். நாத்திகர்கள் இன்று கடவுளை ஒத்துக் கொள்ளாதவர்களாக இருக்கிறார்கள்.

அவர்களோ, 'நாங்கள் எல்லாம் மனசு சுத்தமாக உள்ளவர்கள்தான்' என்றார்கள்.

நான், 'மனசு சுத்தமாக இருக்கிறது அல்லவா? பிறகு, கடவுள்கிட்டே மாத்திரம் ஏன் துவேஷம் பண்ணுகிறாய்?' என்றேன்.

கடவுள் அவர்களுக்கு என்ன பண்ணியது? கெடுதலா பண்ணியது? பிறகு எதற்குக் கடவுளைத் துவேஷம் பண்ணுகிறார்கள்?

பல தேசங்களில் பலபேர் நிறைய 'பிரம்ம துவேஷம்' பண்ணுகிறார்கள்.

பிராமணனை மட்டும் அப்படிப் பண்ணினான், இப்படிப் பண்ணினான் என்கிறார்கள். பிராமணன் எப்போதும் யாருக்கும் ஒரு கெடுதலும் செய்யமாட்டான்.

நவம்பர் 9ஆம் தேதி அன்று சென்னையில் ஒரு புத்தகத்தை வெளியிடுகிறோம். அதிலே நான்கு பாகங்கள் உள்ளது.

தமிழ்நாட்டிலே அந்தணர்கள் எல்லாம் என் னென்ன செய்தார்கள். விஞ்ஞான ரீதியிலே, விவசாயத் துறையிலே, படிப்பு ரீதியிலே என்னென்ன சாதனை படைத்தார்கள் என்று தேடிச் சுமார் 450 பேரைக் கண்டுபிடித்து, அவர்களுடைய விவரங்களை வைத்து தயாரித்திருக்கிறார்கள்.

ஒவ்வொன்றும் 350 பக்கங்கள். பெரிய பெரிய புத்தகங்கள். யாருக்கும் கெடுதல் நினைக்காதவன் எவனோ, அவனே உண்மையான பிராமணன்.

யாருக்கும் அப்பிரியம் பேசாமல்,

யாருக்கும் கடுஞ் சொல் சொல்லாமல் நிஜமாக, உள்ளன்போடு, பிரியமோடு இருப்பவனே பிராமணன்.

பகவத்கீதையிலே ஒவ்வொருவருக்கும் ஒரு தர்மத்தைச் சொன்னான். பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன் என்று... ஒவ்வொருவருக்கும் ஒரு தர்மத்தைச் சொல்லியிருக்கிறான்.

ஆனால் நமக்குச் சொல்லும்போது மட்டும் தர்மத்தைக் குணமாகச் சொன்னான். சாத்வீகமாக இருக்க வேண்டும். சாந்தமாக இருக்க வேண்டும். அமைதியாக இருக்க வேண்டும் பொறுமையாக இருக்க வேண்டும். என்று சொன்னான்.

நீ 'வேள்வி பண்ணு', 'யாகம் பண்ணு' அதைப் பண்ணு இதைப்பண்ணு உபாசனை பண்ணு, என்றெல்லாம் சொல்லவில்லை. இன்னென்ன குணத்தோடு இருக்க வேண்டும் என்று பொதுப்படையாகச் சொன்னார்.

க்ஷத்ரியன் என்று வரும்போது, 'சண்டைபோடு, தைரியமாகச் சண்டை போடு, திரும்பிப் போகாதே' என்று அவனது தர்மத்தைச் சொன்னான். குணத்தோடு தர்மத்தையும் சேர்த்துச் சொன்னான்.

விவசாயம் பண்ணு, வாணிபம் பண்ணு, வியாபாரம் பண்ணு, பசு மாட்டைக் காப்பாற்று... என்று ? ஒவ்வொருவருக்கும் அவரவர் செய்ய வேண்டிய வேலையைச் சொன்னான்.

நமக்குச் சொன்னபோது வேலையைச் சொல்லவில்லை. குணத்தைச் சொன்னான். குணத்தோடு வாழ்வதுதான் மனுஷத் தன்மை என்றான். ஒருவருக்கும் கெடுதல் நினைக்காத பாரம்பரியத்தில் வரும் ஒரே சமுதாயம், நமது சமுதாயம்.

அந்தக் காலம் முதல் இந்தக் காலம் வரை இப்படித்தான் இந்தச் சமுதாயம் இருக்கிறது. நமக்குள்ளே சண்டை போட்டுக் கொள்வோம். சாபம் இட்டுக் கொள்வோம். ஆனால், பிறருக்கு கெடுதல் ஒருபோதும் நினைக்காத சமுதாயம் நம்முடைய சமுதாயம்.

ஆனால் கலியுகத்திலே நம்மீது எல்லோருக்குமே ஒரு தவறான அபிப்ராயம் வந்துவிட்டது. காரணம் நம்மவர்களே சில பேர் கெடுத்து விட்டார்கள்.

நமக்கு யாரும் கெடுதல் செய்யவில்லை. 'நம்முடைய பழக்க வழக்கங்களினாலே நாம் கெட்டுப் போகிறோம்' என்று பெரியவரே அந்தக் காலத்திலே சொல்லியிருக்கிறார்.

அந்தக் காலத்தில் 1954, 56களில் எங்களிடம் பெரியவர் சொன்னார்:

'பிராமணம் எவ்வழியோ, மக்கள் அவ்வழி' என்றார்.

எப்படி ராஜாவோ, மக்களும் அப்படியே இருந்தார்கள். ராஜா எப்படி தர்மவழியில் இருந்தானோ மக்களும் அப்படியே தர்மவழியில் இருந்தார்கள்.

ஆனால் இன்றைக்கு ராஜாவே கிடையாது. எல்லாம் அரசியலாகப் போய்விட்டது. வழிகாட்டுவதற்கு ராஜாக்கள் இல்லாததால் பிராமணன்தான் வழிகாட்டியாகிறான்.

ராஜாவிற்கு யார் வழிகாட்டி? குருக்கள்தான் ராஜாவுக்கு வழிகாட்டி. வசிஷ்டகுரு போன்றவர்கள் தான் ராஜாவுக்கு வழிகாட்டியாக இருந்தார். ராஜா மக்களுக்கு வழிகாட்டியாக இருந்தான்.

ராஜாவுக்கு தர்மத்தையே குரு போதித்தார். ராஜாவும் அதையே மக்களுக்குப் போதித்தான். அதனால் மக்களும் தர்மவழியே நடந்தார்கள். தர்மமும் காப்பற்றப்பட்டது.

சாணக்கியனுடன் ராஜாக்கள் ஆட்சியின் பரம்பரையே முடிந்து போயிற்று. கலியுகத்திலே சாணக்கியர் தான் கடைசியாக வந்த மந்திரி.

அவனுடைய காலத்திலே ஒரு ராஜா இருந்தான். நந்தா என்று பெயர். 'நவநந்தா' எனப்படுவான் அவன்.

நவநந்தா க்ஷத்திரிய குலம். அது அதோடு முடிந்து போயிற்று. அதன்பிறகு சாத்திர பலம் உள்ள சாத்திரிய பரம்பரையே போய்விட்டது.

அதன் பிறகு, பலம் உள்ளவன் எல்லாம் க்ஷத்திரியன் ஆகிவிட்டான். இன்றைக்கும் அப்படித் தான் உள்ளது. பலம் உள்ளவன் எல்லாம் அரசியல்வாதி ஆகிவிட்டான்.

அப்போதே பெரியவர் சொன்னார்:

'என்றைக்குப் பிராமணன் சரியான முறையில் ஆச்சார, அனுஷ்டானங்களைப் பண்ணி சரியாக இருக்கிறானோ, அன்றைக்குத்தான் மக்கள் அவனைப் பார்த்து தன்னைத் திருத்திக் கொள்ள முன் வருவார்கள். அவனே பாதை மாறிவிட்டால் மக்கள் என்ன செய்வார்கள்?

'ஐயாவே தர்மத்தை விட்டுவிட்டு அப்பாலே போய்விட்டார். நமக்கு என்ன? என்று சொல்லுவார்கள்' என்று கூறினார்.

'பிறரைத் துன்புறுத்தி நாம் வாழவில்லை. ஆனால் நம்முடைய தர்மத்தைவிட்டு வெளியே போய் கொண்டு இருக்கிறோமே' என்றுதான் பெரியவர் கவலைப்பட்டார். அதைத்தான் பெரியவர் 'தெய்வத்தின் குரலிலும்' சொல்லி இருக்கிறார்.

நம்முடைய கடமை என்ன?

தர்மத்தை நாம் செய்ய வேண்டும். ஆச்சாரம் அனுஷ்டானம் இருந்தால் போதும். அந்தக் காலம் மாதிரி வேள்வி, யாகங்கள் பண்ணிக் கொண்டு இருக்க முடியாது.

அந்தப் பாரம்பரியத்தில் வந்த சிலர் மட்டும்தான் தீட்சிதர்களாக இருக்கிறார்களே தவிர, எல்லாருமே தீட்சிதர்களாக இருப்பது இல்லை.

ஆனால்- அந்தப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் என்பதை மறக்காமல் நம்மால் முடிந்ததை, அந்த தர்மத்தைக் கொஞ்சம் குறைவாக இருந்தால்கூட விட்டுவிடாமல், கடைப்பிடிக்க வேண்டும்.

அன்றைக்குப் பிற தர்மம் கிடையாது. கிறிஸ்து, இந்து, முஸ்லீம் என்ற மதங்களும் கிடையாது. ஒரே ஒரு தர்மம்தான், மதம்தான் இருந்தது.

நீ பயந்துபோய் வேறு க்ஷத்திரிய தர்மத்தையோ, வைஷ்ணவ தர்மத்தையோ கடைப்பிடிக்காதே என்று சொன்னார்கள்.

ஏனென்றால், க்ஷத்திரியன் தனது தர்மத்தை விட்டு விட்டு ‘நான் சன்யாசியாகப் போகிறேன்’ என்று ஆரம்பித்து விட்டான்.

‘நீ தர்மத்தை விட்டுவிட்டே போகிறாயே... அப்படிப் போய்விடாதே என்பதற்குத்தான் உன் தர்மத்தை நீ கடைப்பிடி. அடுத்த தர்மத்தைக் கடைப்பிடிக்காதே’ என்கிறார்கள்.

தர்மங்கள் என்றால் அவனவன் செய்யக் கூடிய கடமைகள். அந்தக் கடமைகளைக் குறைவாக இருந்தால்கூட விடாமல் செய்துவரவேண்டும் என்பது தான் தாத்பர்யம்.

அப்படித்தான் இருந்துவருகிறது நம்முடைய பாரம்பரியம். அந்தக் காலத்திலே வேள்விகள் செய்து வந்தார்கள். இந்தக் காலத்தில் பகவத் பக்தியாவது செய்து வாருங்கள் என்கிறார்கள். அதையும் விடாது செய்து வாருங்கள் என்றார்கள்.

பெரியவர்கள் அந்தக் காலத்தில் ஒரு உபன்யாசம் சொன்னார்கள்.

சைக்கிள் மாதிரி நம் வாழ்க்கை இருக்கிறது என்பார். ஆனால், இப்போது ஜெட் வேகம் வந்து விட்டது.

அந்தக் காலத்தில் சைக்கிள் பயணம் உதாரணமாக இருந்தது. சைக்கிளில் உட்கார்ந்து பெடலைக் சுத்திக் கொண்டே இருந்தால் வேகமாகப் போய்க் கொண்டு இருக்கும். அதன்பிறகு சுத்தமாட்டான். அப்போது பெடல் பண்ணாமலேயே போகும். பிறகு மறுபடியும் பெடல் பண்ண வேண்டும்.

(தொடரும்)


# அனுக்கிரஹ பாஷணம்

## பூஜ்யஸ்ரீ சங்கர விஜயேந்த்ர ஸரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகள்

## வஜ்ர மஹோத்ஸவம், திருவிடைமருதூர்

ஸ்ரீ ஸங்கர மடம், திருவிடைமருதூர் சனிக்கிழமை, 02-12-2023

(தொடர்ச்சி)



ஆக, அந்தக் காலத்திலிருந்தே பகவத் பாத பாஷ்யம் என்கிறதைப் பற்றி தமிழ்நாட்டில் கல்வெட்டுகள் மூலமாக அங்கே பிரச்சாரம் நடந்த விஷயம் தெரிய வருகிறது. மற்றபடி தமிழிலும் அத்வைத பாவம் பல சாகித்தியத்தில் வெளிப்பட்டிருக்கிறது. அது எல்லாவற்றையும் பெரியவா அத்வைத சபாவினுடைய ஸ்வர்ண மஹோத்ஸவம் காலத்தில் 'அத்வைத்த அட்சர மாலிகா' என்று ஒரு புத்தகத்தை எழுத வைத்தார். ஒவ்வொரு வித்வானும், ஒரு தலைப்பில் எழுத வேண்டும் என்று சொல்லி, பல தலைப்புகள் மூலமாக வித்வான்களுக்கு வாய்ப்பை கொடுத்து 'ருக்வேத அத்வைத்த பாவா' என்று எழுத வைத்தார். கலவை பெரியவா, 1895ல் அத்வைத சபாவை ஸ்தாபிதம் செய்தார்.

அத்வைதத்தை பரம்பரை பரம்பரையாக பிரச்சாரம் பண்ணிக் கொண்டு வருகிற விசேஷமாக அத்வைத்த தரிசனத்திற்காக முக்கியமான க்ஷேத்ரமாக விளங்குவது நமது திருவிடைமருதூர் என்கிற மத்யார்ஜுன க்ஷேத்ரம். காசிக்கு சமமான ஊர்களில் ஒன்று. 'பஞ்சநாதம், கௌரி மாயூரம், திருவெண்காடு, அர்ஜுனம், சாயாவனம், ஸ்ரீ வாஞ்சியம் காஞ்சி ஷேத்திர சமானி ஷட்' இங்கு வீர சோழன், காவிரி நதிகள் உண்டு. இங்கே பெரியவருடைய பூர்வாஸ்ரம தம்பி குஞ்சு சாஸ்திரிகள், புது பெரிவாளுக்கு பூர்வாஸ்ரமத்தில் வேதா அத்தியயனம் பூரணமாக பண்ணி வைத்தார். கோவிந்தபுரத்தில் இருக்கும் பொழுது பெரியவா புது பெரியவாளிடம் மடத்துக்கு வருவது பற்றி சொன்னார். மத்தியார்ஜுனம் மற்றும் அதை சுற்றியுள்ள பிரதேசங்களும் மடத்தினுடைய பாரம்பரியத்திலும் முக்கியமான க்ஷேத்திரங்கள். பெரியவா பல வருஷங்கள் இங்கே

தங்கி மௌன விரதம் இருந்தார். வடக்கே இருந்து கரபாத்ரி சுவாமிகள் இங்கே வந்தார் என்று நினைக்கிறோம். 'புஷ்யே ஜாதசஸ்து பரதஹ' நக்ஷத்திரத்திற்கு பெயர் போன க்ஷேத்ரம் இது. பரதன் நந்திகிராமதில் செய்த பாதுகை பக்தி, பூசத்தில் பூசனை செய்தல். அந்த அர்ச்சனையை. பெரியவா நடத்தினார். தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து நிறைய வித்வான்கள் ராஜு சாஸ்த்ரி, ஹரி ஹர சாஸ்த்ரி, ஹரிகர சாஸ்திரிகள், பண்டித ராஜா, பாண்டுரங்க சாஸ்திரிகள், ஆங்கரை சாஸ்திரிகள், இப்படி நிறைய பேர். அப்பறம் சுவாமிகள் / யதிகள், வரகூர் சுவாமிகள், ஆலங்குடி சுவாமிகள், ஆதி தஞ்சாவூர் கலாச்சாரத்தினுடைய களஞ்சியம். எப்படி பாரதத்தினுடைய இதயம் உத்தரப்பிரதேசமோ, அந்த மாதிரி தஞ்சாவூர் தமிழ்நாட்டின் இதயம்.

**காகார: கலுஷம்' ஹந்தி, வேகாரோ வாஞ்சிதப்ரத: ।**
**ரீகாரோ மோக்ஷதோ ந்ரூ'ணாம்' காவேரீத்யவதாரய ।।**

என்பது போல் காவிரி தீர்த்தத்தில் ஸ்நானம், ஸந்தியா வந்தனம், வேத பிரச்சாரம், வேதம் சொல்லிக் கொடுக்கிறது. சமிதா தானம். ஔபாஸனம், அக்னி ஹோத்ரம், சிவபூஜை, ஆதித்யம், சுவாமிகள் வந்தால் அவர்களுக்காக சன்னியாசி மடம், ஆதி. இதெல்லாம் எதற்கு என்றால் வரலாற்றை மறக்கலாகாது. வரலாறு என்ன என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். வெளிநாட்டில் இந்த கட்டிடம் நன்றாக இருக்கிறது, இந்த நதி நன்றாக உள்ளது, இந்த நகை நன்றாக உள்ளது, அப்படின்னு நாம பார்கிறது வேற; நம்முடைய பிரதேசத்தினுடைய முக்கியத்துவம் என்ன என்கிறதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அந்த தேசத்தில் இன்று நாம் இருக்கோம் அல்லது இல்லை என்பது வேற விஷயம். ஆனால், நாம் எங்கிருந்து வந்திருக்கிறோம் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். இன்றைய இளம் தலைமுறையினருக்கு மிக முக்கியமான விஷயம்.

தஞ்சாவூர் ஜில்லா ஹிஸ்டரி முக்கியம். கல்டிவேஷன் மாத்திரமில்லை மோட்டிவேஷன் கூட. நெல்லு கிடைத்தது, தான்யம் கிடைத்தது கரும்பு கிடைத்தது, கறிகாய் கிடைத்தது, என்பதெல்லாம் லௌகிக, சாப்பாட்டு சம்பந்தப்பட்ட விஷயங்கள். எல்லோருக்கும் அன்னலட்சுமியாக தஞ்சாவூர் ஜில்லா உள்ளது. புதிய டெக்னாலஜி மூலமாக எல்லோருக்கும் அன்ன ஸம்ருத்தி ஏற்படுகிறது. அந்த காலத்தில் இயற்கையாகவே காவேரி மற்றும் அதனுடைய உபநதிகள் மூலமாக அன்ன ஸம்ருத்தி ஏற்பட்டது.

**அன்ன பூர்ணே ஸதாபூர்ணே சங்கர ப்ராண வல்லபே,**
**ஞான வைராக்ய ஸித்யர்த்தம் பிக்ஷாம் தேஹி ச பார்வதி.**

ஞான வைராக்கியத்தை கொடுத்த இடம் இது. இன்று நாம் ஞானத்திலிருந்து வைராக்கியம் என்று நாம் எடுத்துக் கொண்டு விட்டோம். அதற்கு அர்த்தம் நாம் இன்ஜினியரிங் படிக்கிறோம், கம்ப்யூட்டர் சயின்ஸ் படிக்கிறோம், வேறு ஏதாவது லௌகீகமான படிப்பு படிக்கிறோம். கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று இல்லாமல் ஞானத்திலிருந்து வைராக்கியத்திற்கு போகிறோம். வைராக்கியத்தில் இருந்து ஞானம் வந்தது என்பது வேறு. ஞான வைராக்கியம் நமக்கு வரவேண்டும் என்பதற்காக இந்த ஊரை நாம் நல்லபடியாக ஞாபகம் வைத்துக் கொள்ள வேண்டும்.

அறுபது வருடம் முன்பு, பெரியவாளும் புதுப் பெரியவாளும் சேர்ந்து காஷ்மீர் சால்வைகளால் ஆசார்யர் பாதுகைக்கு அர்ச்சனை பண்ணினார்கள். காஷ்மீரம் என்பது ஆத்யாத்மிகமான பூமி, காஷ்யப பூமி. இது நேஷனல் இன்டகரேஷனுக்கு எடுத்துக்காட்டு. வித்வான்களுக்கு அர்ச்சனை செய்த சால்வைகளை சன்மானமாக கொடுத்தார். அத்வைத பாவம் ஏற்பட வேண்டும் என்பதற்காக, நிறைய பேர்களுக்கு பாதுகைகள் கொடுத்து இருக்கிறார். அதில் பலர் இன்றும் பூஜை செய்கிறார்கள்.

அந்த காலங்களில் ஸ்ரீ ராமஜெயம் எழுதினால், திருப்பாவை, திருவெம்பாவை சொன்னால், வெள்ளி காசு அல்லது தங்க காசு கொடுத்தார்கள். அந்த மாநாடும் திருவிடைமருதூரில் நடத்தினார்கள். அந்த காலத்தில், ஸங்கர ஜெயந்தியன்று, ஆதிஸங்கரரை வைத்து மாட்டு வண்டியில் வைத்து புஷ்ய மண்டபம் பக்கத்தில் ஊர்வலம் நடத்தினார்கள். தஞ்சாவூர் ராஜ பரம்பரையினரை ஊர்வலத்தில் கலந்து கொள்ள செய்தார். இவ்விதம் விசேஷமாக ஸங்கர ஜெயந்தியை கொண்டாடினார்கள்.

புதுப் பெரியவாளுக்கு வேதாத்தியானம் பண்ணி வைத்ததும் இந்த ஊரில்தான். நிறைய பூர்வாச்சார்யர்கள் இந்த ஊருக்கு பக்கத்திலேயே வாஸம் பண்ணியிருக்கிராகள். 59வது பீடாதிபதியான பகவன் நாம போதேந்திராள் அதிஷ்டானம் பக்கதில் இருக்கும் கோவிந்தபுரத்தில் உள்ளது. திருவிசைநல்லூர் அய்யவாள் மடம் போன்று, ஊரைச்சுற்றி நிறைய ஷேத்ரங்கள் தான். இந்த மாதிரி திவ்ய க்ஷேத்திரத்தில் மறுபடியும் அதே நிகழ்ச்சி, அதே நாளில் நடத்தனும் என்கிறக்காகத்தான், நாம இங்கே யாத்திரையில் இருந்தாலும், இந்த உத்ஸவத்தை நடத்துகிறோம். அந்த இடம் முக்கியம், அந்த நேரம் முக்கியம், அந்த சம்பவங்கள் முக்கியம். அதனால் அதனுடைய சஷ்டியப்தபூர்த்தி உத்ஸவத்தை கொண்டாடுகிறோம். ஷோபக்ருத் வருஷம் - ஷோபம் என்றால் நல்லது, ஷோபத்தை கொடுக்க கூடியது. அந்த சோபனம் என்பது வெளி அலங்காரம், கொஞ்ச காலத்திற்கு இருக்கும். வாழ்நாள் முழுவதும் இருக்கக் கூடிய சோபை என்பது தர்மத்தின் மூலமாக, ஆசாரத்தின் மூலமாக, ஞானத்தின் மூலமாக வரக்கூடியது. அந்த மாதிரியான ஒரு சோபை வருவதற்கும் கார்த்திகை மாசம் விசேஷம். பண்டித பரம்பரை தொடரணும்.

கும்பகோணத்தில் இருக்கக்கூடிய நமது கிளை மடத்தில் அத்வைத்த பண்டிதர்கள் இருக்கும் படங்களை வைத்தார்கள். அத்வைத பிரச்சாரம் பண்ணியவர்கள் யாரெல்லாம் தமிழ்நாட்டில் உண்டோ அவர்கள் எல்லாரையும் பிரசாரம் பண்ண வைக்கணும். அந்த அத்வைத அனுபூதிக்காக யார் யாரெல்லாம் உழைத்திருக்கிறார்கள்? சில லெளகிகா அத்வைத பிரசாரம் பண்ணி இருக்கிறார்கள். சில பேர் பாடங்கள் நடத்தி இருக்கிறார்கள். சில பேர் தபஸ் பண்ணி இருக்கிறார்கள். மொத்தத்தில் அத்வைத்த தரிசனத்திற்காக, பெரியவா **'அத்வைத க்ரந்த சூசி'** ன்னு புத்தகம் போட்டு இருக்கிறார்கள். தேனம்பாக்கத்தில் அத்வைத சபா நடத்தியுள்ளார்கள். பெரியவா **'பிரம்ம வித்யா பரணம்'** புத்தகம் போட்டிருக்கிறார். திருவிடைமருதூர் பக்கத்தில் திருவெண்காட்டில் பரமசிவேந்திராள் மூலமாக **'வேதாந்த நாம ரத்தின சகஸ்ரம்'** என்று வேதாந்த வாக்கியங்கள் போட்டிருக்கிறார். கிட்டத்தட்ட 1,000 வாக்கியங்கள். அந்த வாக்கியங்களுக்காக விசேஷ அர்த்தங்கள் எழுதினார் சதாசிவ பிரம்மேந்திரர். மொத்தத்தில் வேதாந்தத்தை கொண்டாடி அதன் மூலமாக அனுகிரகத்தை பெற்ற ஊரில், இந்த சபையில், அதே மாதிரி பண்ணியிருக்கேள். அதை இரண்டாவதாக பண்ணியதால், அதை இரட்டிப்பாக பண்ணியிருக்கேள். ரொம்ப உற்சாகத்துடனும் பண்ணியிருக்கேள். இப்போ 10:30 மணிக்கு பிறகு மாடியில் இருக்கும் சத்யம் அத்வைதம் என்ற மகாலிங்க சுவாமி சன்னதி, பெரியவா ஏற்படுத்திய சன்னதி. ஆச்சார்யார் பதஞ்சலியாக இருக்க கூடிய சன்னதியில் விசேஷ அர்ச்சனை நடக்க போகிறது அதில் கலந்து கொண்டு, பாதுகை ஸந்தியில் எல்லா சாகைகளும் இருந்து அவதாரிகை சொல்லி மஹாலிங்க சுவாமி சன்னதியில் வைத்து விசேஷமாக ஏற்பாடு பண்ணியிருக்கேள். வித்வான்கள் எல்லாம் வந்திருக்கா. பாராயணம் ஏற்பாடு பண்ணியிருக்கேள். நல்ல வைதிகமான முறையில், விசேஷமான ரீதியில், நடந்து கொண்டு இருக்கிறது. ஆதி சங்கர ஊர்வலம் ஏற்பாடு பண்ணியிருக்கேள். இந்த மாதிரி மத்திய அர்ஜூன க்ஷேத்திரத்தில் நடக்கிற உத்ஸவத்தை எல்லோரும் தெரிந்துகொண்டு மெட்ராஸ்ல இருக்கிறவா சென்னை, பம்பாய், டெல்லி, வெளிநாட்டில் இருக்கிறவா, எல்லோரும் சேர்ந்துகொண்டு இந்த மாதிரி தர்மத்தில் நாம் வேலை செய்ய வேண்டிய தைரியம் சக்தி, அதற்கான பலன்கள் எல்லாவற்றையும் ஜனங்கள் மறுபடியும் பெறணும். அத்வைத தரிசனம் என்கிறதை, சந்தியாவந்தனத்திலிருந்து ஆரம்பித்து அதற்காக மேரு ஒரு மேருவில் ஒரு சிகரம் இருக்கிறது என்றால், மற்ற ஆவரணங்கள் எல்லாம் சேர்ந்து ஒன்பதாவது ஆவரணம், **'தஸ்மின், ஆனந்த சிந்தெள** அப்படின்னு ஆனந்தமய சாகரத்தில் இருக்கிறது. எல்லோருக்கும் ஆனந்தமாக இருக்கவேண்டும் என்று ஆசை இருக்கிறது. **'புண்ணியஸ்ய ஃபலம் இச்சந்தி, புண்யம் ந இச்சந்தி மானவா: '**, மனிதர்களுக்கு புண்ணியத்தினுடைய பலன் வேண்டும், ஆனால், புண்யம் செய்ய மனது இல்லை.

இதைப் பற்றி துரியோதனன் சொல்லும் பொழுது, புண்ணியம் என்ன என்பது தெரியும், தெரியாது என்பதில்லை. ஆனால் மனது வேறு எங்கோ போகிறது என்றான். ஆக நமக்கு பலன் வேண்டுமென்று இருக்கிறது. பலன் வேண்டாம் என்று இல்லை. அது தானாக ஆட்டோமேட்டிக்காக கிடைக்குமா என்று பார்க்கிறோம். பினா உற்பத்தி, without manufacturing, நமக்கு ஏதாவது கிடைக்குமா என்று பார்க்கிறோம். அப்படி இல்லாமல் எல்லோரும், அதற்காக உழைத்து இந்த கார்யக்ரமத்திற்காக, முல்லைவாசல் சாஸ்திரிகள், அவர் அப்பாவும் பெரியவாளிடம் வந்து நிறைய பாராயணங்கள் செய்திருக்கிறார். வேதம், சாஸ்திரம், சூத்திர சம்ஹிதை பாஷ்யங்கள். காடுபத்திரி ன்னு ஒரு ஊர், கர்நூல் பக்கத்தில் உள்ளது. அங்கு வந்து பாராயணங்கள் செய்தார். நிறைய பேருக்கு நம்முடைய தர்ம சிந்தனை வரவேண்டும் என்பதற்காக. இவரும் நிறைய பண்ணி இருக்கிறார், மணி த்ராவிட் சாஸ்திரிகள் வந்திருக்கிறார். சன்னியாசிகளும் வந்து இருக்கின்றனர். வேத பண்டிதர்கள் சாஸ்திர பண்டிதர்கள் வந்திருக்கிறார்கள். நல்ல முறையில் எல்லோரும் சேர்ந்து கொண்டு இதற்காக உழைத்து நன்றாக பண்ணிருக்கேள். திருவிடைமருதூர் என்பது வேதத்திற்கும் சாஸ்திரத்திற்கும் அத்வைதத்திற்கும், பக்திக்கும் பெயர் பெற்றது.

திருவிடைமருதூரில் ரதம் பிரசித்தம். அதற்காக புது பெரியவா உற்சாகப்படுத்தி, மஞ்சக்குடி தயானந்த சரஸ்வதியிடம் சொல்லி, ஓங்காரநந்தா மூலமாக, மர தேர் பண்ணினார். உத்ஸவம் நடந்து கொண்டு இருக்கிறது. எல்லா விடத்திலும் அங்கே, சாங்கோபாங்கமாக என்று சொல்வார்கள், அந்த மாதிரி வேத, வேதாந்த, வேதாங்க, பக்தி, எல்லாவற்றிற்குமாக ஆதர்சமாக நடக்கிறது. புஷ்ய பாராயணம் நடக்கிறது. மத்யார்ஜுன மடத்தின் திருப்பணியும் நடந்து கொண்டிருக்கிறது. யஜுர் வேதம், சாம வேத பாடசாலைகள் நடக்கின்றன. ஆக, நம்முடைய இடத்தில், மறுபடியும் அத்வைத தர்சனம், வேத சாஸ்திரங்கள் எல்லாம் வலுப்படும். அதன் மூலமாக, அத்வைத தரிசனத்தின் மூலமாக, வேத சாஸ்திர சம்ரக்ஷணத்தின் மூலமாக, அந்த பிரதேசமும் காப்பாற்றப்பட வேண்டும். நாம் எங்கு வசித்துக் கொண்டு இருக்கிறோமோ, **தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**, என்றபடி அந்த ஊரும், அது ஸ்தோத்ர பூமியாக இருந்து, தூஷன பூமியாக இல்லாமல், நல்ல விதத்தில் ஸகாரம், ஸாகாரம், ஸத்காரம் அதன் அந்த மூணும் வேனும். ஸகாரம் - Positive thinking; ஸாகாரம் - நாம் கற்பனையில் மாத்திரமில்லாமல், வேலையும் செய்ய வேண்டும். அந்த மாதிரி செய்துவிட்டீர்கள். 100 சால்வைகளால் அந்த காலத்தில் செய்தார்கள். உங்களுக்கு பக்தி அதிகம். அதனால் 200 சால்வைகளால் அர்ச்சனை செய்துள்ளீர்கள். ஸத்காரம் - வித்வான்களை எல்லாம் வரவழைத்து, கௌரவப்படுத்தி உள்ளீர்கள். இந்த அர்ச்சனை என்பது மிக மிக விசேஷமானது. பிரதி வருஷம் இந்த

நாளை ஞாபகம் வைத்துக் கொண்டு, திருவிடைமருதூரில், கார்த்திகை மாசம் இதை ஒரு நிகழ்ச்சியாக வைத்துக் கொண்டு சம்வத்ஸர உத்ஸவம் திருவிடைமருதூர் மடத்தில், ஒரு கார்யக்ரமத்தை ஏற்பாடு பண்ணி, வேதாந்த உபநியாசம் பண்ணி, தர்மங்கள் நடக்கணும். தொடர்ந்து இந்த நல்ல காரியத்தில் ஜனங்களுக்கு ஈடுபாடு வந்து, சம்ஸ்கிருத பாஷையை காப்பாற்ற வேண்டும். இப்பொழுது கோவிந்தபுரத்தில் விசேஷமான முயற்சி நடக்கிறது. அங்கு வேதம், சாஸ்திரம், பிரஸித்தி குறைந்து போன சாகைகள், எல்லாம் மறுபடியும் பிரச்சாரம் செய்ய வேண்டும் என்று, பாடசாலைகள் வைத்து இருக்கிறார்கள். அதே மாதிரி விஷயங்களில் நல்ல பலன் கிடைத்தது.

உரிய செயல்களைச் செய்யக்கூடிய கலாச்சாரத்தை, காப்பாற்றிக் கொள்ளக் கூடிய கலாச்சாரத்தை, வளர்க்கக் கூடிய கலாச்சாரத்தை பரப்பக்கூடிய பூமி அது. ரெண்டு பெரிவாளும் பாதுகா அர்ச்சனம் பண்ணியது ஞாபகம் வருவதற்காக அங்கே படங்களை வைக்க சொன்னோம். அந்த திவ்யமான சன்னதியை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்.

கடைசியாக சொன்ன. 108 வது அர்ச்சனை மிக நன்றாக அமைந்திருக்கிறது. **अद्वैतरूपेणैव नमस्कारः ? माण्डूक्यकारिकाभाष्यम् – अलातशान्तिप्रकरणे १** எல்லோர் மனத்திலும் ஆன்மீக பாவத்தை உண்டாக்கி, எல்லோரும் சௌஜன்யம், சௌமுக்கியமுடன் இருந்து, இந்த தார்மீகமான பரம்பரை, சம்பிரதாய பரம்பரை, மேலும் சசக்தமாக இருந்து, அந்த ஸாம கோஷ ப்ரியர், மகாலிங்க ஸ்வாமி எல்லோருக்கும் மகத்தான பலனை அளித்து, ஆச்சார்யாளுடைய அனுக்கிரகம், நம்முடைய பெரியவா, புது பெரியவாளுடைய அனுக்கிரகம் எல்லோருக்கும் கிடைத்து,

**ஸ்ருதி, ஸ்மிருதி புராணானாம், ஆலயம் கருணாலயம்,**
**நமாமி பகவத் பாத ஸங்கரம், லோக ஸங்கரம்;**

அப்படின்னு ஆச்சார்யாளுடைய அனுக்கிரஹம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும் என்று வேண்டுகிறோம்.

ஹர ஹர நம பார்வதீ பதயே, ஹர ஹர மகாதேவா
ஹர ஹர சங்கர, ஜெய ஜெய சங்கர.

# ஸ்ரீ ஸதாசிவ ப்ரம்மேந்த்ரரின் கீர்த்தனைகள்

*ராகம் காபி* *தாளம் ஆதி*

**ब्रूहि मुकुन्देति रसने ब्रूहि मुकुन्देति**

**केशव मादव गोविन्देति क्रुष्णानन्द सदानन्देति (ब्रूहि)**
**राधारमण हरे रामेति राजीवाक्ष घनश्यामेति (ब्रूहि)**
**गरुडगमन नन्दकहस्तेति खण्टित दशकन्धरमस्तेति (ब्रूहि)**
**अक्रूरप्रिय चक्रधरेति हम्स निरन्जन कमसहरेति (ब्रूहि)**

**ப்ரூஹி முகுந்தேதி ரஸனே ப்ரூஹி முகுந்தேதி**

**கேசவ மாதவ கோவிந்தேதி க்ருஷ்ணானந்த ஸதானந்தேதி (ப்ரூஹி)**
**ராதாரமண ஹரே ராமேதி ராஜீவாக்ஷ கனஸ்யாமேதி (ப்ரூஹி)**
**கருடகமன நந்தகஹஸ்தேதி கண்டித தஸகந்தரமஸ்தேதி (ப்ரூஹி)**
**அக்ரூரப்ரிய சக்ரதரேதி ஹம்ஸ நிரஞ்சன கம்ஸஹரேதி (ப்ரூஹி)**

*பொருள் : ஏ நாக்கே! முகுந்தனே என்று சொல் முகுந்தனே என்று சொல் கேசவனே மாதவனே கோவிந்தனே க்ருஷ்ணாணந்தனே ஸதா ஆனந்தமயமானவனே என்றும் நாக்கே சொல்.*

*ராதாரமணனே ஹரியே ராமனே தாமரைக்கண்ணா மேகம் போன்று கரிய நிறம் உடையவனே என்றும் நாக்கே சொல். கருடனவாகனனே, நந்தகம் என்னும் வாளைக் கையில் கொண்டவனே,தசக்க்ரீவனின் தலைகளைக் வெட்டி எறிந்தவனே என்றும் நாக்கே சொல். அக்ரூரப்ரியனே, சக்ரத்தை ஏந்தியவனே, ஹம்ஸம் போல் மாசற்றவனே, கம்ஸனைக் கொன்றவனே என்றும் நாக்கே சொல்.*

# ராஜதரங்கிணி 13

பி. ஆர். கண்ணன்

தரங்கம் 6

அபர்ணா ஸ்துதி:

**நேதம் பர்ணஸமீரணாஸநதபோமாஹாத்ம்யமுக்ஷோரகௌ**
**பஸ்யைதாவத ஏவ ஸம்ப்ரதி க்ருதௌ தந்மாத்ரவ்ருத்தீ பஹி : ।**
**ப்ரேம்ணைவார்தமிதம் சராசரகுரோ: ப்ராபேயமாத்மஸ்துதீரேவம்**
**தேவவதூமுகாத்ஸ்ருதிஸுகா: ஸ்ருண்வத்யபர்ணாவதாத் ।। 1 ।।**

இலைகள், காற்று ஆகியவையினாலே ஜீவித்திருக்கும் விரதத்தினால் கிடைத்த பெருமை அல்ல அபர்ணாவிற்கு; பார்; காளையும், பாம்பும், அவ்வாறு ஜீவித்திருந்தும் வெளியில் தள்ளப்பட்டுள்ளன; அன்பினாலேயே அபர்ணா சராசர உலகின் ப்ரபுவின் பாதிபாகத்தை அடைந்துள்ளாள். இவ்வாறு தேவஸ்த்ரீகளின் மூலமாக செவிக்கினிய தன் பெருமையைக் கேள்வியுறும் அபர்ணா நம்மைக் காக்கட்டும்.

**ராஜா யஸஸ்கரர்**

நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் வந்த இந்த ராஜா குணவானாகவும், திறமைசாலியாகவும் திகழ்ந்தார். கல்ஹணர் புகழ்கிறார்:

‘விவசாயிகள் கிராமங்களில் வேலை செய்பவர்கள் ராஜாவின் அரண்மனையைப் பார்த்தாரில்லை; வேதப் பயிற்சியில் ஈடுபட்ட ப்ராம்மணர்கள் ஆயுதம் தாங்கினாரில்லை.‘ ராஜாவின் மந்திரிகள், ஆலோசகர்கள் ஆகியோர் பேரறிஞர்களாயிருந்தனர்.

பிணக்குகளைத் தீர்க்க ராஜா புதுவிதமான புத்திசாலியான வழிமுறைகளைக் கையாண்டார். ராஜ்யத்தில் ஒருவர் நகரைவிட்டுச் செல்லுமுன் தன் வீட்டை விற்றார். பத்திரத்தில் ஸோபாந கூப ரஹிதம் க்ருஹம் விக்ரீதம் என்று எழுதியிருந்தார், அதாவது படிக்கட்டு, கிணறு இல்லாமல் வீடு விற்கப்பட்டது. தன் மனைவியை படிக்கட்டையும், கிணற்றையும் பார்த்துக்கொள்ளச் சொல்லி, அவர் வேற்று ஊர் சென்றார். வீட்டை

வாங்கியவர் படிக்கட்டையும், கிணற்றையும் பலவந்தமாகக் கைப்பற்றி, அவளை விரட்டிவிட்டார். பழைய வீட்டு உரிமையாளர் திரும்பி வருகையில், தன் மனைவி பிச்சையெடுத்து, நடுத்தெருவில் வாழும் நிலையைக்கண்டு வெகுண்டு, பல நீதிமன்றங்களை அணுகியும் வெற்றி கிட்டவில்லை. இறுதியில் வழக்கு ராஜாவின் முன்னிலையில் வந்தது. ராஜாவுக்கு ஸந்தேகம் எழவே, மிகுந்த சாதுர்யத்துடன் ரகஸ்யமாக விசாரித்து உண்மையைக் கண்டறிந்தார். அதாவது, பத்ரப் பதிப்பாளர் கார்யாலய எழுத்தர், பத்ரத்தில் ஸோபாந கூப ரஹிதம் க்ருஹம் விக்ரீதம் என்பதை ஸோபாந கூப ஸஹிதம் க்ருஹம் விக்ரீதம் என்று மாற்றித் திருத்தியிருந்தார். இதை யாரும் கண்டுபிடிக்கவில்லை. அதனால், ரஹிதம் (இல்லாமல்) என்பதற்குப் பதிலாக ஸஹிதம் (சேர்ந்து) என்று பத்ரத்தில் இருந்ததால், எல்லா நீதிமன்றங்களும் வழக்கைத் தள்ளுபடி செய்திருந்தன. உண்மையைக் கண்டுபிடித்த ராஜா தக்க தண்டனை வழங்கி, வீட்டை பழைய உரிமையாளருக்கே உடைமையாக்கி, வீட்டை வாங்கிய ஏமாற்றுக்காரரை நாடு கடத்தினார்.

கல்ஹணர் சொல்வது:

**து: ஸம்லக்ஷ்யஸ்து தர்மோஸாவதர்மம் பாததேஞ்ஜஸா ।**
**திஷ்டந்நித்யமதிஷ்டாய தாஹ்யம் காஷ்டமிவாநல: ।। 64 ।।**

'நீதி அநீதிக்கு வெகு அருகில் சென்று, தாக்குவதைக் காண்பது கஷ்டமாகி விடுகிறது; நெருப்பு விறகுக் கட்டையைத் தாக்குவதுபோல.'

இவ்வாறு பல நிகழ்ச்சிகளைக் கூறுகிறார் கல்ஹணர்.

ராஜா க்ருதயுகம்போல் ஆட்சியை நடத்தினாலும், காலப்போக்கில் பல தவறான செயல்களில் ஈடுபட்டு, ராஜ்யத்தில் அசாந்தியை ஏற்படுத்தி, மரணத்தை அடைந்தார்.

ராஜா யஸஸ்கரருக்குப் பின் பல ராஜாக்கள் சிறியகாலங்கள் ஆட்சி நடத்தி, ராஜ்யத்தை மேலும் கீழ்நிலைக்கே தள்ளினர். பாவச் செயல்களால் செல்வத்தை ஈட்டியும், அவர்கள் பல ஆலயங்களைக் கட்டினர் - பர்வகுப்தேஸ்வரர், க்ஷேமகௌரீஸ்வரர், ஸிம்ம ஸ்வாமி என்று; மடங்களையும் நிறுவினர் - ஸ்ரீ கண்டமடம், க்ஷேமமடம் என்று.

(தொடரும்)

# பிற்காலத்துத் தமிழ் நூல்களில் அத்வைதம்

(ஸ்ரீ தேவ சங்கர டாக்கர்)

ஒன்றான பரம்பொருளே எல்லாமாய்த் தோற்றுகிறது என்பது அத்வைதசித்தாந்தம் இதற்கு உதாரணமாகிற தமிழ்ப் பாடல்கள் வருமாறு:

ஞானானந் தச்சுடராய் நன்றாகி யொன்றான
தானா கியபடத்திற் றான்றன்னா-னானாவா
யார்த்த கடலுலக மாமோ வியமெழுதிப்
பார்த்து மகிழ்ந்தான் பரன். **அமுதசாரம்.**

ஆன கடங்க ளளவிலவற் றுட்புகுந்து
வானகந் தானின்ற வாறொக்கும்-யோனிகளெண்.
பத்துநான் காயிரநூ றாகப் படைத்தவற்று
ணித்தனார் நின்ற நிலை. **அமுதசாரம்.**

அணுவென்பர் மாமாயை யென்ப ரணுவின்
புணர்வென்பர் பூதமே யென்பர்- குணமென்பர்
எவ்வேது வும்மோ துக விதற்கோ ரேதுவென்னா
வவ்வேது வேயேது வாம். **அமுதசாரம்.**

மன்னு முதற்பொருளின் மன்னாத விவ்வுலகம்
பின்ன மெனுமாறு பேசற்க - பொன்னே
யணியாவ தன்முன்னு மப்பொன்னே காய்ச்சி
மணியான போது மறித்து. **அமுதசாரம்.**

உண்டு தேக்கிட் டெங்கு மொன்றானே னம்மானை
உண்மைக்கோ ருத்த ரந்தா னில்லைகா ணம்மானை.
திருவம்மானை

பதியாகி யுரைபவனே மாயையெனும் பாசத்தாற் பசு க்களாகி
வதியா நிற்பன வெவையுங் கட்டிடுவன் முகைவிரிநாண் மலர்கடுவித்

துதியா மெய்ஞ்ஞானத்தால் தொழுதிடிலத் தொடர்ச்சியினை யகற்றித்தூய
கதிமேவி யமர்ந்துறையக் கண்ணிரங்கிக் கருணைபொழிந் திடுவன்றானே

இலிங்க புராணம்

நினைப்புமாம் மறப்புமாகி நினைவினுக் கெட்டா தொன்றாய்
அனைத்துமாய் நின்றாய் போற்றி யருமறைக் கொழுந்தே போற்றி
கனைத்துவண் டிமிரவிள்ளுங் கடுக்கையங் கண்ணியோடு
புனுற்றுவெண் டிங்கட்கண்ணி புனைந்த செஞ்சடையாய் போற்றி.

-இலிங்க புராணம்

சிவன் முதலே யன்றி முதலில்லை. - திருக்களிற்றுப்படியார் 64.
திருமல சிவன்றன் மாயையாற் கனப்போ னிருமிக்கப் பட்டனவெல்லாம்

அவனே யவனி முதலாயினானு
மவனே யறிவாகி னாறானு - மவனேகா
ணாணாகிப் பெண்ணா யலியாகி நின்றானுங்
காணாமை நின்றானுங் கண்டு.

திருக்களிற்றுப்படியார் 88.

பொன்னிறங் கட்டியினும் பூணினு நின்றாற்போ
லந்நிற மண்ணலு மம்பிகையுஞ்-செந்நிறத்த
ளெந்நிறத்த ளாயிருப்ப ளெங்கள் சிவபதியு
மந்நிறத்த னாயிருப்ப னாங்கு.

திருக்களிற்றுப்படியார் 79.

மாய னாயினை மறையவ னானாய் மன்னுயிர்த் தொகை யனைத்தையு
மொடுக்கும்

பாயு மால்விடை யுருத்திர னானாய் பன்னு மூவர்க்கு மூலமாய் நின்றாய்
ஞேய மாயினை ஞாதிரு வானாய் நிகழு ஞானமு மாயினை யெந்தாய்
வேய தோளுமை பங்குறை நீல மிடற்றா னே திருக் கலைசையுத் தமனே.
-கலைசைப் பதிற்றுப்பத்தந்தாதி 31.

# முகாம் நிகழ்ச்சிகள்

*முகாம் நிகழ்ச்சிகள் தொடர்ச்சி*

பிப்ரவரி முதல் நாள் ஹைதராபாத்திலிருந்து புறப்பட்டு சஹிராபாத்திற்கு முகாம் வந்து சேர்ந்தது. பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஸ்ரீ சித்தி விநாயக சுவாமி தேவஸ்தானத்தில் தங்கியிருந்தார்கள்.



ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரரின் மூன்று கால பூஜை பிற்பகலில் முடிவுற்று பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் வந்திருந்த பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கி அருளினார்கள். முகாம் இங்கிருந்து புறப்பட்டு ஷோலாபூர் செல்லும் வழியில் ஆதர்ஷ் வித்யாலயா சிப்பந்திகள் மற்றும் மாணவர்களுக்கு ஆசி வழங்கிய பின்னர் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் விஜய யாத்திரை தொடர்ந்தது.

ஷோலோபூரில் மூன்று நாட்கள் முகாம் நடைபெற்றது. பிப்ரவரி 2ம் நாள் குழுமியிருந்த பக்தர்களை ஆசீர்வதித்ததுடன் நித்ய பாராயண ஸ்தோத்திரங்களையும் கற்பித்தார்கள். பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் எளிய முறையில் ஸ்லோகங்களை இருமுறை புரிந்துகொள்ளும் முறையில் வாசித்து அதனை திரும்பி சரியான முறையில் சொல்ல செய்யவும் தெரிவித்தார்கள். தொடர்ந்து ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜை முடிந்த பின்னர் ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கி அருளினார்கள். மாலை பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் ஸ்ரீ பாலாஜிஆலயத்திற்கு விஜயம் செய்து குழுமியிருந்த பக்தர்களை ஆசிர்வதித்து அனுக்ரஹ பாஷணம் வழங்கி அருளினார்கள்.

பிப்ரவரி 4ம் நாள் காலை ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜை முடித்து பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கிய பின்னர் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் புனே நகருக்கு விஜய யாத்திரை புறப்பட்டார்கள். புனே நகரின் எல்லைப் பகுதியில் தேயூர் என்னுமிடத்தில் மஹாராஷ்ட்ர மாநிலத்தில் புகழ் பெற்ற அஷ்ட விநாயக க்ஷேத்திரத்தில்

ஒன்றான ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் திருக்கோவிலில் இரவு தங்கினார்கள். அடுத்த நாள் பூஜ்ய ஸ்ரீ ஆசார்யாள் காலை 7.00 மணிக்கு தக்துசேத் கணபதி திருக்காவிலுக்கு வருகை தந்து அங்கிருந்து க்ஷேபா (புனித) யாத்திரையாக சறுஸ்பாக் என்னுமிடத்தில் உள்ள ஸ்ரீ சங்கர மடத்திற்கு புறப்பட்டார்கள்.

ஸ்ரீ சங்கர மடத்தில் பிப்ரவரி 12 வரை முகாம் நடைபெற்றது. ஷோலாபூரிலிருந்து புறப்பட்டு புனே நகருக்கு விஜயம் செய்தபோது பாரம்பரிய முறையில் விழாக்கோலமாக பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்களால் வரவேற்க்கப்பட்டு ஊர்வலமாக அழைத்து வரப்பட்டார்கள்.

பிப்ரவரி 6ம் நாள் மாலை ஆலன்டி என்னுமிடத்தில் கீதா பக்த அம்ரித் மஹோத்சவ் நிகழ்ச்சிக்கு பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் வருகை தந்து, வந்திருந்தவர்களிடையே அனுக்ரஹபாஷணம் வழங்கி அருளினார்கள்.

ஸ்ரீ கோவிந்த கிரிஜி அவர்களின் 75வது ஜயந்தி உற்சவத்திற்கு ஆசி வழங்கி அருளினார்கள். இதில் பல்வேறு மாநிலங்களிலிருந்து சாதுக்களும், சந்நியாசிகளும் கலந்து கொண்டார்கள்.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் அனுக்ரஹபாஷணத்தில் கணாபத்யம் முதல் சைவம் வரை ஷண்மதத்தைச் சார்ந்த அநேக க்ஷேத்திரங்களைக் கொண்ட தெய்வீக மாநிலமாக மஹாராஷ்ட்ரா விளங்குகிறது என்றும் அநேக சாதுக்களும், சந்நியாசிகளின் அவதார ஸ்தலமாக விளங்குகிறது என்றும் குறிப்பிட்டார்கள். மேலும் பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள், ஸ்ரீ கோவிந்த தேவ் கிரிஜி ஸ்ரீ மடத்துடன் இணைந்து ஆன்மீக பயணத்தைப் பற்றியும், பகவத் கீதையை 100க்கும் மேற்பட்ட தேசங்களுக்கு கொண்டு சென்று அதனை விஷ்வ கீதையாக அநேக மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்தமைக்கு, தனது சந்தோஷத்தை தெரிவித்தார்கள். பூஜ்ய ஸ்ரீ சுவாமிகள் வைதிக ஹிந்து தர்மம் தேசத்தின் பல்வேறு பகுதிகளை சேர்ந்த மக்களை ஒருங்கிணைப்பதுடன் நம் அனைவரையும் தார்மிக வழியில் மார்க்க தர்சனத்தில் வழி நடத்துவதாகவும் வலியுறுத்தினார்கள். தர்மத்தை விரும்புகின்ற அனைவருக்கும் பகவத்கீதை ஒரு நுழைவு வாயிலாக உள்ளது என்றும் குறிப்பிட்டார்கள். பூஜ்ய ஸ்ரீ மஹாசுவாமிகள் ஞானேஸ்வரி மார்க்கதர்சனத்தை தமிழில் எப்படி மொழிபெயர்க்க செய்தார்கள் என்பதை நினைவு கூர்ந்தார்கள். ஒருவார கால நிகழ்வுகளில் வேத சபை, சாஸ்த்ர சபை, பஜனை மற்றும் பலவித நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

ஸ்ரீ கோவிந்த தேவ் கிரிஜி 75வது பிறந்த நாள் நிகழ்ச்சியில் அயோத்தியில் ராமர் பிரதிஷ்டா வைபவத்தின் முக்கியத்துவம் சிறப்பு குறித்தும் குறிப்பிட்டார்கள். மேலும் ஸ்ரீ கோவிந்ததேவ் கிரிஜிக்கு ''சுவதர்ம சுவராஜ்ய சேவா ரத்னம்'' என்ற பட்டத்தை வழங்கி அவர்தம் தர்மத்தின் வழி சேவைகளையும் தேசப்பற்றையும் பாராட்டினார்கள்.

மஹாராஷ்ட்ரா சந்நியாசிகளின் பூமி என்றும், ஸ்ரீ சத்ரபதி காலத்தில் ஆண்ட அரசர்கள் சந்நியாசிகளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள் என்றும் ஸ்ரீ ஆதி சங்கரர் ஷண்மதத்தை ஸ்தாபிக்கும்போது ஸ்ரீ விநாயகரை அஷ்ட விநாயக் க்ஷேத்ரம் என்பதால் வழிபட்டார்கள் என்றும், இது ஒரு நவீன ஆன்மீக வித்யா பூமி என்றும் (சம கால பழமையான கல்வி) பல்வேறு விமர்ச்ன ரீதியான பதிப்புகள் சனாதன தர்மத்தைப் பற்றி மஹாராஷ்ட்ராவில் வெளியிடப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டார்கள். இது வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பாலமாக உள்ளது. தஞ்சாவூர் மராத்தி அரசு காஞ்சி மடத்துடன் நெருங்கி இணைந்துள்ளதையும் குறிப்பிட்டார்கள்.

நமது பரமாசார்ய பூஜ்ய ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி மஹா சுவாமிஜி அவரது 80வது வயதில் பாத யாத்திரையாக 5000 கி. மீட்டர்கள் மஹாராஷ்ட்டிர கிராமங்களில் விஜயம் செய்து இருக்கிறார்கள். சதாராவில் உத்திர சிதம்பரம் நடராஜர் திருக்கோவிலை நிர்மாணித்து அருளினார்கள். இது மஹராஷ்ட்ரா, கேரளா, ஆந்திரா மற்றும் தமிழ்நாடு அரசுகளின் ஒற்றுமைக்கு எடுத்துக்காட்டாகும். ஆதிசங்கராசார்ய காலடியிலிருந்து காமாக்யா - காஞ்சியிலிருந்து காசி, காட்மாண்டு வரையிலான அவர்தம் யாத்திரையில் ஒற்றுமையால் கவரப்பட்டார்கள். ஸ்ரீ கோவிந்ததேவ் கிரிஜி பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளால் பைதாள் மற்றும் பிரதிஷ்டா நகரி என்னும் இடத்தல் அனுக்ரஹம் பெற்று இருக்கிறார்கள். அங்கிருந்து தான் பலராம் பிரதிஷ்டா புனித யாத்திரை.

நமது தர்மத்தால் நாம் அனைவருக்கும் எல்லா இடங்களிலும், இயற்கையில், பசுவில், மரங்களில், தீர்த்த க்ஷேத்திரங்களில் குறிப்பாக விக்ரஹம் மற்றும் மூர்த்தி பூஜையில் நம்பிக்கை உள்ளது. ஜனவரி 22ம் நாள் சுபகிருது வருடம் பௌஷ்ய மாதம் சுக்ல துவாதசி சோமவாரத்தில் சைதன்ய மூர்த்தி (ஸ்தாபிக்கப்பட்டது) நிறுவப்பட்டது. நமது ஸ்வதர்மத்திற்கு சுதந்திரம் தேவை.

ஆதி சங்கரர் பஜ கோவிந்தத்தில் நாம் தினசரி பகவத்கீதையை படிக்கவும் விஷ்ணு சஹஸ்ரநாமத்தை பாராயணமும் செய்ய வேண்டும் என குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பூஜ்ய ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகளின் அனுக்ரஹத்துடன் அவர்தம் மார்க்க தர்சனம் மற்றும் பிரேரேபணையின்படி ஸ்ரீ கோவிந்த தேவ் கிரிஜி மகராஜ் சுயமாக நான்கு விதமான பணிகளாக உலகெங்கும் பகவத் கீதையை பரப்புதல், பாடசாலைகள் நிறுவி வேதத்தை ரக்ஷித்தில், நமது பணிகளை நடப்பு மொழிகளில் எடுத்துச் செல்லுதல், மற்றும் தேச பக்தியை உருவாக்குதல் போன்றவற்றில் ஈடுபடுத்திக் கொண்டார்கள்.

கடந்த 1000 ஆண்டுகளாக இன்னல்களை சந்தித்ததில் தர்மமான விதைகள் வளர்ந்து இன்று ஆலமாக செழித்துள்ளது. இத்தருணத்தில் அவருக்கு பட்டம் வழங்கி ஆசிகளை தெரிவிக்கிறோம்.

பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளின் அனுக்ரஹபாஷணத்தை தொடர்ந்து ஸ்ரீ கோவிந்த தேவ் கிரிஜிக்கு வழங்கப்பட்ட ஸ்வதர்ம ஸ்வராஜ்ய சேவா ரத்ன பட்டத்தின மடலை ரமேஷ் பாய் ஓஜா வாசித்தார்கள். ஸ்ரீ கோவிந்ததேவ் கிரிஜியின் பெயர் தங்கத்தினால் பொறிக்கப்பட்டும், ஸ்வதர்ம ஸ்வராஜ்ய சேவா ரத்தினம் என்ற பட்டம் விலையுர்ந்த கற்களால் பதிக்கப்பட்டதுமான பரிசும் வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஸ்ரீ சிதானந்த சரஸ்வதிஜி, ஸ்ரீ ஆசார்ய மஹாமண்டலேஸ்வர், ஸ்ரீ சுவாமி அவ்தேஷானந்த கிரிஜி மகராஜ், ஸ்ரீ பாபா ராம்தேவ், சாத்வி பகவதி சரஸ்வதி, ஆசார்ய பால கிருஷ்ணா மேலும் சாதுக்கள், சந்நியாசிகள் கலந்து கொண்டார்கள். மேலும் உத்திரபிரதேச மாநில முதலமைச்சர் ஸ்ரீ யோகி ஆதித்யநாத், மஹாராஷ்ட்ர மாநில துணை முதல்வர் ஸ்ரீ தேவேந்திர பட்னாவிஸ், மஹாராஷ்ட்ர மாநில அமைச்சர்கள், பல்வேறு முக்கய பிரமுகர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள்.

பிப்ரவரி 13ம் நாள் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜை முடித்த பின்னர் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கி அருளினார்கள். தொடர்ந்து புனா கோத்குட் இடத்திலிருந்து ஷோலாப்பூருக்கு முகாம் புறப்பட்டது. ஷோலாப்பூரில் ஸ்ரீ சட்லா என்பவர் கிருஹத்தில் இரண்டு நாட்கள் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் பூஜை நடைபெற்றது.

பிப்ரவரி 14ம் நாள் அன்று ஷோலோப்பூரில் ஸ்ரீ சங்கரமடம் நிறுவ நடைபெற்ற பூமி பூஜையில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் கலந்து கொண்டு அனுக்ரஹித்தார்கள்.

பிப்ரவரி 15ம் நாள் ஸ்ரீ சந்திரமௌலீஸ்வரர் மூன்று கால பூஜை முடித்து பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதமும், தரிசனமும் அளித்த பின்னர் ஜஹிராபாத்தில் உள்ள ஸ்ரீ சித்தி விநாயக சுவாமி தேவஸ்தானத்தில் இரண்டு நாட்கள் முகாம் நடைபெற்றது.

ரத சப்தமி நாளன்று காலை சூர்ய நமஸ்காரங்கள் நடைபெற்றது. பிப்ரவரி 19ம் நாள் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் கலகுர்த்தி முகாமில் காலை பக்தர்களுக்கு தரிசனம் தந்தருளினார்கள். சூர்யலதா நூற்பாலையில் முகாம் நிகழ்ச்சிகள் நடைபெற தந்து உதவினார்கள். பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் சந்திரமௌலீஸ்வரர் பூஜை முடித்து பக்தர்களுக்கு தீர்த்த பிரசாதம் வழங்கி அருளினார்கள். மாலை நூற்பாலை அமைப்புகளை பார்வையிட்டு பின்னர் அப்பகுதியில் உள் ரிக்வேத பண்டிதர்கள் குடும்பங்களுக்கு அருளாசி வழங்கினார்கள்.

பிப்ரவரி 21ம் நாள் ஸ்ரீசைலம் ஜோதிர்லிங்க க்ஷேத்திரத்தில் அமையப்பெற்ற ஸ்ரீ பிரம்மரம்பா சமேத ஸ்ரீ மல்லிகாரஜுன சுவாமி தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் இன்று காலை ஜகத்குரு பூஜ்ய ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது. முன்னதாக யாக சாலையில் மஹா பூர்ணாஹூதி நடைபெற்றது. முன்னதாக 20ம் தேதி மாலை பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் கல்குர்தியிலிருந்து ஸ்ரீசைலம் வருகை தந்தார்கள். இடையே ஸ்ரீ சக்தி கணபதி ஆலயத்திற்கு விஜயம் செய்தார்கள். ஸ்ரீசைலம் க்ஷேத்ர நுழைவில் பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகளுக்கு திருக்கோவில் அலுவலர்கள், வேத பண்டிதர்கள், அர்ச்சகர்கள் மற்றும் பக்தர்களால் வரவேற்கப்பட்டார்கள். திருக்கோவிலில் ஸ்ரீ மல்லிகார்ஜுன சுவாமி, ஸ்ரீ பிரம்மராம்பிகை தேவி சந்நிதிகளுக்கு விஜயம் செய்த பின்னர் யாகசாலை பூஜைகளையும் அனுக்ரஹித்தார்கள். கும்பாபிஷேகத்தில் பல்வேறு சந்நியாசிகளும் தீர்க்கதரிசிகளும் கலந்து கொண்டார்கள்.

ஸ்ரீசைலத்தில் திருக்கோவிலுக்கு அருகில் உள்ள ஸ்ரீ சங்கர மடத்தில் முகாம் நடைபெற்றது. பூஜ்ய ஸ்ரீ ஆசார்ய சுவாமிகள் இன்று மாலை விசேஷ பிரதோஷ பூஜையும் நடத்தி அருளினார்கள்.

ஜய ஜய சங்கர ஹர ஹர சங்கர

தொடரும்

# பங்குனி மாதம்
# ஸ்ரீ மடத்தில் - விசேஷ தினங்கள்

| தேதி | கிழமை | விபரம் |
|---|---|---|
| 14-03-2024 | வியாழன் | காரடையான் நோன்பு |
| 20-03-2024 | புதன் | ஏகாதசி |
| 21-03-2024 | வியாழன் | த்வாதசி |
| 22-03-2024 | வெள்ளி | ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் ஆராதனை<br>ப்ரதோஷ பூஜை |
| 24-03-2024 | ஞாயிறு | பௌர்ணமி பூஜை |
| 25-03-2024 | திங்கள் | பங்குனி உத்ரம் |
| 28-03-2024 | வியாழன் | ஸ்வாதி - வேத பாராயணம் |
| 30-03-2024 | சனி | அனுஷம் - தேர் ; அனுஷம் - வேத பாராயணம் |
| 01-04-2024 | திங்கள் | மூலம் - தேர் ; மூலம் - வேத பாராயணம் |
| 03-04-2024 | புதன் | உத்ராடம் - தேர் ; உத்ராடம் - வேத பாராயணம் |
| 05-04-2024 | வெள்ளி | ஏகாதசி - அவிட்டம் தேர் ; அவிட்டம் - வேத பாராயணம் |
| 06-04-2024 | சனி | ப்ரதோஷ பூஜை |
| 09-04-2024 | செவ்வாய் | வஸந்த நவராத்ரி ; உகாதி |

*15-03-2024; 22-03-2024 ; 29-03-2024 05-04-2024; 12-04-2024*

வெள்ளிக்கிழமை பூஜை மாலையில் ஸ்ரீமஹாத்ரிபுரசுந்தரி
சமேத ஸ்ரீசந்த்ரமௌலீஸ்வரருக்கு விசேஷ அபிஷேக பூஜை

# அத்வைத ஆச்சார்ய பரம்பரை 18

## ஸ்ரீ வாசஸ்பதிமிஸ்ரர்

அத்வைத ஆசார்ய பரம்பரை கற்றோரும் ஈச்வரனிடமிருந்து துவங்குகிறது என்று பார்த்தோம். இந்த பரம்பரையில் ஈச்வர அவதாரங்கள் உண்டு, இல்லற ஞானிகள் உண்டு, துறவறத்தில் நிலைபெற்ற ஞானியர் உண்டு. அத்விதீய ஆத்ம தத்துவத்தை அனுபவத்தில் உணர்ந்த பிரம்ம நிஷ்டர்கள் உண்டு. மோனத்தில் நிலைபெற்ற யோகிகள் உண்டு. இத்தகைய ஆசார்ய பரம்பரையில் ஸ்ரீ வாசஸ்பதி மிஸ்ரர் தனித்த புகழுடன் விளங்கும் கனத்த ஞானமுடைய, இல்லறம் என்றும் துறவறம் என்றும் பேதமற்ற போத நிலையில் வாழ்ந்த எல்லா ஸம்பிரதாய பிரவர்த்தகர்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட, போற்றப்பட்ட அரிய அறிஞர்.

பிஹார் மாநிலத்தைச் சேர்ந்த மிதிலா நகரைச் சேர்ந்தவர் வாசஸ்பதி மிஸ்ரர். இந்திய நேபாள எல்லைப் பிரதேசத்தில் இவ்வூர் உள்ளது. பேரறிஞரான இவரது ஞாபகார்த்தமாக இவ்வூர் இன்று ‘வாசஸ்பதி நகர்’ என்று வழங்கப்படுகிறது. ஸநாதன தர்மத்தின் ‘ஷட் தர்சனங்கள்’ எனப்படும் நியாயம். வைசேஷிகம், ஸாங்க்யம், யோகம், பூர்வ மீமாம்ஸா, உத்தர மீமாம்ஸா ஆகிய ஆறு சாஸ்திரங்களுக்கும் உரை எழுதிய பேரறிஞர் இவர். ஸ்ரீ சங்கர பகவத் பாதரின் பரஹ்ம ஸூத்ர பாஷ்யத்திற்கு எழுதியுள்ள உரை மிகவும் பிரஸித்தமானது. கற்றோரும் கூட வியக்கும் அளவிற்கு எழுதப்பட்டுள்ள இவரது உரை மிக ஆழமானது. மிக நவீனமானது. மிக மிக கவர்ச்சிகரமானது; கருத்து கடல் போல் ஆழமானது, விசாரம் இமயம் போல் விரிந்து பரந்து இருக்கிறது.

இன்றைக்கு சற்றேரக்குறைய ஆயிரம் வருடங்களுக்கு முன் தோன்றியவர். ஸ்ரீ வாசஸ்பதி மிஸ்ரர். மிகச் சிறிய வயதிலிருந்தே சாஸ்திரங்கள் கற்பதில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த இவர் தன் சொந்த வாழ்க்கை பற்றி நினைத்ததேயில்லை. ‘ந்ருகன் என்ற பெயருடைய மன்னன் இவரது ஆர்வத்தைக் கண்டு வியந்தான். எல்லா சாஸ்திரங்களையும் கற்க ஆவன செய்தான். அக்கால வழக்கப்படி மிகச்சிறிய வயதிலேயே விவாஹம் நிச்சயிக்கப்பட்டது. விவாஹ தினங்களில் வேதமறிந்தவர்களும் சாஸ்திர விற்பன்னர்களும் பங்கு கொண்ட ஸதஸ் நடைபெற்றது. மிகப் பெரிய பண்டிதர்கள் பங்கு கொண்டனர். பலவகைப்பட்ட

விவாதங்கள், பலதிறப்பட்டக் கருத்துக்கள், விசாலமான அறிவின் வெளிப்பாடுகள், அனுபவங்களினின்று வெளிப்பட்ட ஆழ்ந்த உண்மைகள் இவற்றைக் கண்டு வியந்த வாசஸ்பதி மிச்ரர் எல்லா சாஸ்திரங்களையும் கசடறக் கற்பதே வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டார். அன்றே உறுதி பூண்டார். ஊண் உறக்கம் மறந்தார். இல்லம் மறந்தார், இல்லாளையும் மறந்தார். ஸதா ஸர்வ காலமும் ஸாஸ்த்ர விசாரணையிலேயே வாழ்நாள் கழிந்தது. ஷட்தர்ஸனங்களுக்கும் உரை எழுதத் துணிந்தார். செயற்கரிய செய்வார் பெரியர் என்றபடி இறுதியில் ஸ்ரீ பகவத்பாதரின் ஸூத்ர பாஷ்யத்திற்கு உரை எழுதிவிட்டு துறவறம் பூண்டு இமயமலைச் சாரல் சென்று ஞானத்தின் விளிம்பை மோனத்தில் எட்டிப் பார்ப்பது என்று தீர்மானித்துக் கொண்டார்.

'ந்யாய'த்தில் ஆரம்பித்து ஒவ்வொரு தர்சனத்திற்கும் உரை எழுதி வருகிறார். வருடங்கள் உருண்டோடுகின்றன. கற்றலில் கடந்தன பல வருடங்கள். உவகையுடன் உரை எழுதுவதில் உருண்டன பற்பல வருடங்கள். கர்மானுஷ்டானத்திலிருப்பார். பிறகு சிவபூஜையிலிருப்பார். மீதி நேரம் முழுவதும் எழுத்து, எழுத்து, எழுத்து, சீடர்கள் சுவடிகள் எடுத்து வந்து சீர்ப்படுத்தி வைப்பார்கள். பத்தினி அவரது சொந்த தேவைகள் அனைத்தையும் பார்த்துப் பார்த்து செய்து வருகிறாள். கணவனுக்கு அருந்த நீர் எடுத்து வைப்பாள், உடுத்த துவைத்த உடை எடுத்து வைப்பாள், அனுஷ்டானத்திற்கும் பூஜைக்குமான உபகரணங்களை முறைப்படி எடுத்து வைப்பாள். இலைபோட்டு ஆஸனம் போட்டு உணவளிப்பாள். இப்படியெல்லாம் யாரோ செய்கின்றார்களே என்ற நினைப்பின்றி, எங்கோ மோனத்தில் லயித்த பார்வையோடு சாஸ்திர சிந்தனையில் தன்னை மறந்தவராக 'ரோபோ' போல் இயங்கி வருகிறார். அதிமானஸ நிலையில் மதி முழுதும் ஞான நிதியால் ஸ்ரீ பகவத்பாதரின் ஸூத்ர பாஷ்யத்தில் லயித்திருந்தது. தர்மபத்தினியான 'பாமதி'யோ பதியை அனுஸரித்திருப்பதிலேயே ஒரே மதியுடனிருந்தாள்.

பகல் முழுதும் 'அகலகில்லேன்' என்று பணி செய்வாள். பொழுது சாய்ந்ததும் தீபமேற்றி ஞான தீபத்தை வணங்குவாள். கர்மானுஷ்டானம் முடித்து வந்து அமர்ந்து தீப ஒளியில் திரும்ப உரை எழுதத் துவங்குவார். தீபத்தின் ஒளிக்குப் பின் ஒரு மோன தீபம் இருப்பதை உணர்ந்தாரில்லை. உணரும் நாளும் வந்தது. இருவருமே அவரவர் கர்மத்தில் கண்ணாயிருந்தனர். மற்ற எதனையும் காணும் கண்ணில்லாத வராயுமிருந்தனர். ஒரு நாள் மாலை நேரம். அனுஷ்டானம் முடித்து சுவடிக்குவியல்களுக்கிடையே சாய்வு மேஜையின் முன் வந்து அமர்ந்தார். முதல் ஐந்து

தர்சனங்களுக்கும் உரை எழுதியாயிற்று. ஆறாவது தர்சனமான வேதாந்தத்திற்கும் எழுதி முடித்தாகி விட்டது. ஸ்ரீ சங்கரரின் ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்திற்கு உரை எழுதி முடிந்த நேரம் மனதில் இனம்புரியாத ஒரு மகிழ்ச்சி. மனம் மிகவும் லேசாகிப் போனது போல் ஆயிற்று. சாய்வு மேஜையின் முன் அமர்ந்தார். இருட்டத் துவங்கி விட்டது. இச்சமயத்தில் இவரது பத்தினி 'பாமதி' அருகில் வந்து தீபமேற்றினாள். செய்ய வேண்டியவற்றை செய்து முடித்து க்ருதக்ருத்யனாயிருந்த ஸ்ரீ வாசஸ்பதி மிஸ்ரர் தீபத்தின் ஒளியில் தீபமேற்றிய தியாக தீபத்தை நிமிர்ந்து பார்க்கிறார். பாணிக்ரஹண நாளன்று பார்த்த முகம், பிடித்த கரங்கள். கரங்களின் தர்சனத்தையும், முகத்தின் தர்சனத்தையும் கண்டு வியந்தவராக 'அம்மா! நீ யார்?' எனக் கேட்கிறார். 'நான் யார் என்பது ' இருக்கட்டும். தங்கள் ஞான பிரதர்சனத்தைத் தொடருங்கள் என்றாள் பத்தினி.

'தொடர இனி ஏதுமில்லை. எல்லாம் முடிந்து விட்டது. நீ யாரென்று சொல்' என்று வினவினார். 'நான் தங்கள் தர்மபத்தினி. பா'மதி என்பது எனது பெயர். தங்களுக்குக் கைங்கர்யம் செய்வதில் நான் எனது உடல், பொருள், ஆவி மூன்றையும் தங்களுக்கு அர்ப்பணித்தவள். தாங்கள் கடைப்பிடிக்கும் தர்மத்தை முழுமையாகப் பின்பற்றும் ஸஹதர்மசாரிணி என்றாள். அதிர்ந்துவிட்டார் வாசஸ்பதி மிச்ரர். கண்களில் நீர் பெருக ஏறிட்டுப் பார்த்தார். தீப ஒளியில் த்யாக தீபமாகப் பிரகாசிக்கும் மனைவியை இருகரம் கூப்பி வணங்கினார். என் சாதனைகள் அனைத்திற்கும் பின்னால் வெற்றிக்கு வித்தாக நின்றவள் நீ. உலகம் உள்ள அளவும் போற்றி வணங்கத்தக்க பதிவ்ரதையாக உன்னை அனைவரும் ஏற்பார்கள். ஈடு இணையற்ற உனது தியாகமே உயர்ந்தது. உலகம் உள்ள அளவும், மலைகளும் கடல்களும் உள்ள வரையிலும் உனது கீர்த்தி விளங்குமாறு இப்போது நான் எழுதி முடித்த ஸூத்ரபாஷ்ய உரைக்கு உனது பெயரான 'பா'மதி' என்பதையே உரையின் பெயராகச் சூட்டுகிறேன்' என்று கூறி அவளை வாழ்த்தினார்.

தான் எல்லா சாஸ்திரங்களுக்கும் உரை எழுதும் முன் செய்திருந்த தீர்மானத்தை மனைவியிடம் தயங்கித் தயங்கிச் சொன்னார். தேவஹூதி கர்த்தமப் பிரஜாபதியுடன் வாழ்ந்ததும், அருந்ததி வசிஷ்டருடன் வாழ்ந்ததும், அநஸூயா அத்ரி முனிவருடன் வாழ்ந்ததும் பற்றிக் கூறி 'தங்கள் பத்தினி என்ற பெருமையே எனக்கு ஆயுள் உள்ளவரையில் போதும், என் கணவர் என்றும் என் நெஞ்சில் நீங்காது வாழ்ந்து கொண்டிருக்கிறார். அது எனக்குப் போதும்' என்று கூறி விடை கொடுக்க, ஸ்ரீ வாசஸ்பதி மிஸ்ரர் கலங்கிய மனதுடன் விலங்குகள் அறுத்து துறவறம் பூண்டார்.

இமயம் சென்றார். மரணமிலாப் பெருவாழ்வு பெற்றார். பா'மதியும் இன்றளவும் கற்றோரும் மற்றோரும் வியக்க சாஸ்திர பூமியில் என்றும் மாறாத இளமையுடன் பவனி வந்து கொண்டிருக்கிறாள்.

அத்வைத சித்தாந்தம் ஸ்ரீ வாசஸ்பதி மிஸ்ரரின் 'பா'மதி' உரைக்குப் பின் 'பா'மதி பிரஸ்தான' மென்றும் பிரகாசாத்மரின் 'பஞ்சபாதிகா விவரண'த்திற்குப் பின் விவரண பிரஸ்த்தானமென்றும் இருபெரும் பிரிவுகளுடையதாக ஆயிற்று. ஸ்ரீ வாசஸ்பதி மிச்ரரின் ஸூத்ர பாஷ்ய உரையான 'பா'மதி'க்கு ஆறு பிரஸித்தமான உரைகள் கிடைக்கின்றன. ஸ்ரீ அமலானந்தரின் 'கல்பதரு' இவற்றுள் மிகவும் உயர்ந்ததாகக் கருதப்படுகிறது. கல்பதருவிற்கு ஸ்ரீ அப்பைய்ய தீக்ஷிதரின் 'பரிமளம்' என்ற உரையையும், ஸ்ரீ லக்ஷ்மி ந்ருஸிம்மர் 'ஆபோகமென்ற உரையையும் எழுதியுள்ளார். 'பா'மதி'க்கு அகண்டானந்தர் எழுதியுள்ள 'ருஜுப்ரகாசிகா' எனப்படும் 'பா மதீவ்யாக்யானமும்', பாமதி திலகம், பாமதீ விலாஸம் என்னும் உரைகளும் சிறந்தனவாகக் கருதப்படுகின்றன.

மண்டனமிச்ரரின் 'ப்ரஹ்ம ஸித்தி' க்கு 'ப்ரஹ்ம தத்வ ஸமீக்ஷா' என்ற உரை, 'விதி விவேக'த்திற்கு 'ந்யாய கணிகா' என்ற உரை, பாட்ட ஸம்பிரதாயத்தைத் தழுவி பூர்வ மீமாம்ஸைக்கு 'தத்வபிந்து' என்ற நூல், ஸாங்க்ய தர்சனத்தை விளக்கும் முகமாக 'ஸாங்க்ய தத்வ கௌமுதி' என்ற நூல் ந்யாய சாஸ்திரத்திற்கு 'ந்யாய கணிக தாத்பர்யம்' 'ந்யாய ஸுசிநியந்தனம்' என்ற இருநூல்கள் இவரது மதபேதமற்ற ஞானத்தைப் பறை சாற்றுகின்றன.

**'வேதாந்த தர்ஸனம் தர்ஸனேஷு ஸர்வேஷு தர்ஷனீய தமம் தர்ஷனம்'** என்ற 'ந்யாயரத்னாவளி' வாக்யத்தின்படி 'எல்லா தர்சனங்களைக் காட்டிலும் வேதாந்த தர்சனமே சிறந்தது' என்பது ஸ்ரீ ஆசார்யாள் பாஷ்யத்தின் மூலமும், பாமதியின் மூலமும் தெளிவாகிறது. அத்வைத ஆசார்ய பரம்பரையில் தொடர்ந்து வருபவர் அருமையான நூல்கள் எழுதியுள்ள 'ஞானகனபாதர்'.

...வளரும்

# ப்ரபோத சிந்தாமணி

*ஸ்ரீ எஸ். ராமசந்திர ஐயர்*

## 3. தவத்தின் தேவை

தவம் ! இந்தச் சொல் சிலருக்குத் திகைப்பூட்டுவதாக உள்ளது. தவம் என்றால் உபவாசம், வனவாசம், மௌனம், வைராக்கியம், பிரம்மச்சர்யம், அஹிம்சை–இவைகளே அவர்கள் மனதில் தோன்றுகின்றன. இப்படிப்பட்ட தவம் உண்மையில் கடினமானது தான். ஆகையால் தான் இக்காலத்தில் தவம் என்பதே நடைமுறையில் இல்லாமல் போய்விட்டது. தவத்தைப் பற்றிச் சொல்பவரும், கேட்பவரும் குறைவாகவே உள்ளனர். தவத்தை அனுஷ்டானம் செய்பவர்களை விரல் விட்டு எண்ணிவிடலாம். இன்றைய மனிதர்களுக்கு தவத்தின் பொருள் புரிவதில்லை. அதனால் தவம் என்றாலே அலர்ஜியாக உள்ளது.

தவம் சன்னியாசிகளுக்கோ, சாதகர்களுக்கோ மட்டுமானது அல்ல. அன்றாட வாழ்வில் எல்லோருக்கும் தேவையான சாதனமே ஆகும். பண்டிதர்கள், மாணவர்கள், சிறியவர்கள், பெரியவர்கள், எல்லோருக்கும் அன்றாட வாழ்க்கையில் தவம் மிகவும் தேவை.

தவம் என்றால் என்ன ? **தபதி இதி தப:**, நம் பாவங்கள் மற்றும் தோஷங்களைச் சுடக்கூடிய சக்தியே தவம். ஒவ்வொரு மனிதனும் தெரிந்தோ தெரியாமலோ தவறுகளைச் செய்துகொண்டே இருக்கிறான். உடம்பினால், கண் காது, நாக்கு மற்றும் மனதினால் மனிதன் பாவங்களைச் செய்கிறான். இவ்வாறு திரிகரணங்களால் செய்யும் பாவங்களைச் சுட்டுச் சாம்பலாக்கும் சாதனையே தவமாகும்.

சத்தியத்தை விட பெரிய தவம் இல்லை. செய்த தவறுகளை உணர்ந்து வருந்துவதை விட வேறு தவம் உண்டா ? அன்பு, பரிவு, நேர்மை, வாக்குத் தவறாமை எல்லாமே தவம் அல்லவா ? நீளமான தாடி, பெரிய குங்குமப் பொட்டு, விபூதிப்பட்டை, காவியாடை ஆகியவை அணிந்திருந்தாலும் மனதில் சகோதரத்துவம், நட்பு, அன்பு, கடமையுணர்வு, ஏகாக்கிரதை இவையோடு இருப்பதுதான் நிஜமான தவம். தவத்தினால் மனிதன் இந்த விச்வம் முழுவதற்கும் ஆனந்தத்தைத் தரமுடியும். தவத்தினால் எதை வேண்டுமானாலும் சாதிக்கலாம். **தபஸா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வந தபோ ப்ரஹ்மேதி; யஸ்ய ஜ்ஞானமய தப: ।** என்று உபநிஷத்துகள் கூறுகின்றன அல்லவா ? இத்தகைய தவம் யாருக்குத் தான் வேண்டாம் ?

# சாணக்ய ஸுபாஷிதம்

**சூன்யம்**

**அபுத்ரஸ்ய க்ருஹம் சூன்யம் திச: சூன்யாஸ்த்வபாந்தவா:**

**மூர்கஸ்ய ஹ்ருதயம் சூன்யம் ஸர்வம் ஸூன்யம் தரித்ரஸ்ய ॥**

*பிள்ளை இல்லாதவன் வீடு சூன்யம், பந்துக்கள் இல்லாதவனுக்கு திசைகள் சூன்யம் மூர்க்கனுக்கு இதயம் சூன்யம் எல்லாம் சூன்யம் தரித்ரனுக்கு.*

**ஒன்றுதான் ஆனால்**

**ஏகோதர ஸம்பூதா ஏக நக்ஷத்ர ஜாதகா:**

**ந பவந்தி ஸமா: சீலைர்யதா பதரிகண்டகா: ॥**

*ஒரே உதரத்தில் பிறப்பு, ஒரே நக்ஷத்ர ஜாதகம். இரண்டு நபர்கள் நடத்தையில் இலந்த மர முட்கள் போல் சமமாயிருப்பதில்லை.*

**கசப்பு**

**வயஸ: பரிணாமோபி ய; கல: கல: ஏவ ஸ; ।**

**ஸுபக்வமபி மாதுர்யம் ந உபயாதி இந்த்ர வாருணீ ॥**

*துஷ்டன் வயதானாலும் துஷ்டனே இந்த்ர வாருணியின் பழம் எவ்வளவு மதுரம் கூட்டினாலும் கசந்து வழிவது போல்.*

**சிறந்தது**

**ஸர்வஓஷதீனாம் அம்ருதம் ப்ரதானம் ஸர்வேஷு ஸௌக்யேஷு அசனம் ப்ரதானம்**

**ஸர்வேந்த்ரியாணாம் நயனம் ப்ரதானம் ஸர்வேஷு காத்ரேஷு சிர: ப்ரதானம் ॥**

*மருந்தென்றால் அம்ருதமே சிறந்தது. ஸௌக்யமென்றால் அன்னம் சிறந்தது. இந்த்ரிங்களில் சிறந்தது கண்கள், உறுப்புகளில் சிறந்தது தலையே.*

**சத்தானது**

**அன்னாத் தசகுணம் பிஷ்டம் பிஷ்டாத் தசகுணம் பய:**

**துக்தாத் தசகுணம் மாம்ஸம் மாம்ஸாத் தசகுணம் க்ருதம் ॥**

*அன்னத்தை விட மாவு பத்துமடங்கு சத்தானது, அதைவிட பத்துமடங்கு பால். பாலைவிட பத்து மடங்கு மாம்சம் அதைவிட நெய் பத்து மடங்கு சத்தானது.*

**வளர்ச்சி**

**சாகேன ரோகா வர்தந்தே பயஸா வர்ததே தனு:**

**க்ருதேன வர்ததே வீர்யம் மாம்ஸான் மாம்ஸம் வர்ததே நச ।**

*பச்சைக் காய்களினால் ரோகம் வளரும், உடல் பாலினால் வளரும் நெய்யினால் வீர்யம் வளரும், மாம்ஸத்தால் மாம்ஸம் வளரும்.*

**தப்பித்தல்**

**அசக்தஸ்து பவேத் ஸாது; ப்ரம்மாசாரீ ச நிர்தன:**

**வ்யாதிதா தேஸபக்தச்ச வ்ருத்தா நாரீ பதிவ்ரதா ॥**

*இயலாதவன் ஸாதுவாவான், பணம் இல்லாதவன் ப்ரம்மசாரியாவான். பிணி உள்ளவன் பக்தனாவான்,வயதான பெண் பதிவ்ரதையாவாள்.*

**துச்சம்**

**த்ருணம் ப்ரம்மவித: ஸ்வர்கஸ்த்ருணம் சூரஸ்ய ஜீவனம்**

**ஜிதாக்ஷஸ்ய த்ருணம் நாரீ நி:ஸ்ப்ருஹஸ்ய த்ருணம் ஜகத் ॥**

*ப்ரம்ம வித்திற்கு ஸ்வர்கம் துச்சம், வீரனுக்கு வாழ்வு துச்சம் புலனடக்கியவனுக்கு பெண் துச்சம், ஆசை அழிந்தவனுக்கு இவ்வுலகம் துச்சம்.*

**பின்பெற்றல்**

**ராஞ்கீ தர்ம்மிணி தர்மிஷ்டா: பாபே பாபா: ஸமா: ஸமே**

**ராஜானமனுவர்தந்தே யதா ராஜா ததா ப்ரஜா: ॥**

*அறம் புரியும் அரசன் மக்களையும் அறம் செய்ய வைப்பான். அதர்ம அரசன் அதர்மத்தை செய்ய வைப்பான். ஏனெனில் அரசன் எவ்வழி மக்கள் அவ்வழி.*

*(தொடரும்)*

# மகா பெரியவாளின் நினைவு மஞ்சரி



இன்னொரு ஸமயம் இரவு 10 மணி அளவில் பெரியவா விஸ்ராந்தியாக இருந்தார். என்னைப் பார்த்து அமாரசிம்மன் எந்த தெய்வத்தை ஸர்வக்யர் என்று கூறினான் என்றார்கள். **ஸர்வக்ய ஸுகதோ புத்த:** என்று புத்தரைக் கூறியதாகக் கூறினேன். அது இருக்கட்டும் நம்ம ஸ்வாமிகளை குறிப்பிட்டிருக்கிறாரா என்றார்.

நான் விடை தெரியாமல் விழித்தேன். அவரே சம்புரீஸ என்று தொடங்கும் சிவ நாமாக்களை வரிசையாகச் சொல்லி **'க்ருஸானுரேதா: ஸர்வக்யோ தூர்ஜடீ நீல லோஹித:'** என்னும் வாக்யத்தில் சிவ பெருமானை ஸர்வக்யன் என்று கூறியுள்ளார். வேற்று மதத்தில் இருப்பவர் நம் மத தெய்வத்தைக் கூறுவது விசேஷம்.

பெரியவாளை நினைப்பதாலேயே நம் இன்னல்கள் தீரும் என்பதை என் வாழ்வில் நடந்ததைக் கூறுகிறேன்.

1977 ஆம் ஆண்டு கொல்கத்தாவில் வேத ஸம்மேளனம் நடை பெற்றது. அதில் கலந்து கொள்ள நாங்கள் 15 பேர் ரயிலில் பயணம் செய்தோம். அப்போது பெரியவரின் மகிமைகளைப் பற்றிப் பேசிக்கொண்டே போனோம். வண்டி ஸ்ரீகாகுளத்தில் நின்றது. அங்கு இறங்கி பழங்களை வாங்கிக் கொண்டு மீண்டும் ஏறினோம்.

தொலை தூரம் வந்தபின்தான் எங்களுடன் வந்த பாலா மணி என்பவர் பழம் வாங்கும் போது டிக்கட்களை தவறவிட்டது தெரிந்தது.

எங்கள் எல்லோருக்கும் பயம். அபராதத் தொகைக் கட்டக்கூட போதிய பணம் இல்லை. அப்போது புதிய டிக்கட் பரிசோதகர் வந்தார். எங்களுக்கு இன்னும் பயம் அதிகமாயிற்று. எங்களிடம் வந்த அவர் பட்டியலில் எங்கள் அனைத்துப் பெயர்களையும் 'டிக்' செய்துவிட்டுச் சொன்னார்: ' உங்கள் டிக்கட்கள் ஸ்ரீகாகுளம் ஸ்டேஷன் மாஸ்டரிடம் பத்ரமாயிருக்கின்றன. பயமின்றி பயணம் செய்யுங்கள்' பின்பு தன் கையொப்பமிட்ட மற்றொரு சீட்டையும் எங்களிடம் தந்தார்.

பொறுப்பாக நடந்து கொண்ட அந்த ஸ்டேஷன் மாஸ்டருக்கு மனதால் நன்றி தெரிவித்தோம். இதற்குக் காரணம் மகா பெரியவாதான் என்றால் மிகையாகாது.


ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர

ஸ்ரீ

தர்மோ ரக்ஷதி ரக்ஷித:

## ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்

### சீடர்களின் கவனத்திற்கு

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகளின்
சீடர்களாகிய நாம் நமது குடும்பத்தில் அவ்வப்பொழுது நடைபெறும்
சுபநிகழ்ச்சிகளுக்கு பத்திரிகைகள் தயார் செய்யும்போது
கீழ்க்கண்ட வாசகங்களை முதலில் அமைப்பது சாலச்சிறந்ததாகும்.

''ஸ்ரீ மஹா த்ரிபுரசுந்தரி ஸமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வர ஸ்வாமி க்ருபையுடன்,
ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதாள் பரம்பராகத மூலாம்நாய ஸர்வக்ஞபீடம்
ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ சங்கராச்சார்ய
ஸ்வாமிகள் பரிபூரண அனுக்ரஹத்துடன்

# வேதாந்த ஸம்வத்ஸரம்

*ஸ்ரீ சுப்பராய சர்மா*

*ஓம் 'த'காரோபதேசவிதே வேதாந்தபாஸ்கராய நம:*

**தேவ மானவ ரக்ஷோப்ய: தம தான தயாபர: ।**

**ஜனகஸ்யோபதேசோஸ்யம் 'த'ஸ்து வேதாந்தபாஸ்கர: ।।**

தேவதைகள், மனிதர்கள், அரக்கர்கள் ஆகிய தன் மூன்று மக்களுக்கும் தமம், தானம், தயை இவைகளை உணர்த்தக் கூடிய 'த'காரத்தை, தந்தையாகிய ப்ராஜாபதி உபதேசம் செய்தார்.

## 24. 'தவ'காரத்தினுடைய மகிமை

**தேப்யோ தேவேப்ய: ஹைததக்ஷரமுவாச 'த' இதி, மனு ஷ்யேப்ய:, ஹைததக்ஷரமுவாச 'த' இதி, அஸுரேப்ய:, ஹைத்தக்ஷரமுவாச 'த' இதி ।**

**ப்ரஹதாரண்யகோபநிஷத் 5-2-2**

*தேவதைகளுக்கும் மனிதருக்கும் அசுரர்களுக்கும், 'த' என்கிற ஒரே அக்ஷரத்தையே ப்ரஜாபதி உபதேசித்தார்.*

பிரம்மாவுடைய மூன்று புதல்வர்களான, தேவதைகள், மனிதர்கள், அசுரர்கள், பிரஜாபதியாகிய தந்தையிடம் சென்று 'எங்களுக்கு மனதிற்கினிய உபதேசம் செய்யுங்கள்'' என்று பிரார்த்திக்கிறார்கள். அப்பொழுது மூவருக்கும் ஒருவருடகாலம் பிரம்மச்சரியத்தை அனுஷ்டிக்கும்படி உத்தரவிட்டார். பிறகு அந்த மூவருக்கும் த, த, த என்று ஒரே 'த'காரத்தையே உபதேசம் செய்தார். 'உங்களுக்கு என் உபதேசம் புரிந்ததா' ? என்று கேட்கிறார். அவர்களும் புரிந்தது என்றனர்கள்.

விஷய போகத்தில் முழுகியிருக்கும் தேவதைகள் தம (புலனடக்க)த்தையும், சுயநலமிக்கவரான மனிதர்கள் தானத்தையும், இரக்கமற்ற அஸுரர்கள் தயையயும், தந்தையானவர் உபதேசம் செய்தார் என்று தெரிந்து கொண்டனர். உபதேசம் ஒன்றேயான போதிலும் அவரவர் ஸம்ஸ்காரத்திற்கு ஏற்றவாறு அர்த்தம் ஆகிறது அல்லவா?

।। ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி: ।।

# மகாபாரத சுருக்கம்

பாரதக் கதையை மூலம் மட்டும் சுருக்கமாக இங்கே தருகிறோம்.
**டாக்டர். வே. ராகவன்** - தொகுத்துத் தந்ததை தமிழில் மொழி பெயர்த்து அளிக்கிறோம். மொழி பெயர்ப்பாளர் : **ஜயவிஜயா**

## மௌஸல பர்வம்

*ஜய விஜயா*

*யுத்தம் நடந்து முப்பத்தாறு வருடங்கள் கழிய யுதிஷ்டிரர் பல துர் நிமித்தங்களைக் கண்டார்.*

*உனது குலம் அழியும் என்று காந்தாரியின் வார்த்தை உண்மையாகப் போகிறதை எதிர் பார்த்த க்ருஷ்ணர் தீர்த்த யாத்ரைக்கு ஏற்பாடு செய்தார்.*

*தங்கள் குலத்துடன் ப்ரபாஸ க்ஷேத்ரத்துக்கு வந்த யாதவ குலத்தோர் மது பான வெறியில் ஒருத்தரை ஒருவர் கோரைப்புல்லால் அடித்துக் கொள்ள அவை உலக்கையாக மாறி அனைவரையும் கொன்றது.*

*பின்பு க்ருஷ்ணர் தன் தேரோட்டி தாருகனிடம் யாதவ குலத்தின் அழிவை அர்ஜுனனுக்கு சொல்லச் சொல்லி தன் தகப்பன் வஸுதேவரைக் காணச் சென்றார். 'ஐயனே! அனைத்தையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அர்ஜுனன் வரவிற்காக காத்திருங்கள். நானும் பலராமனும் காட்டிற்குச் சென்று தவம் இயற்றுவோம்'*



*இப்படிச் சொல்லி விட்டு க்ருஷ்ணர் பலரமரை காட்டில் சந்தித்தார். அப்போது*

பலராமரின் வாயிலிருந்து ஒரு பாம்பு கடலில் நுழைந்தது இதுவே தனக்கும் ஸ்வர்கம் போக சரியான தருணம் என்று உணர்ந்து ஒரு மரத்தின் அடியில் படுத்து தன் யோக மகிமையால் யோகத்தில் ஆழ்ந்தார்.

இந்த்ரியங்களை அடக்கி மூவுலக நியதியைப் பரிபாலனம் செய்தார். அவரே தெய்வமானாலும் எல்லாம் அறிந்தவரானாலும் மனிதரைப் போல் தேகத்தை விட ஒரு நிமித்தத்தை விரும்பினார். மஹா யோகத்தில் அவர் சயனித்தார். அப்போது ஒரு உக்ரமான வேடன் ஜரை என்னும் பெயர் கொண்டவன் வேட்டையாட வந்தவன் படுத்திருக்கு அவரை மான் என்று எண்ணி அம்பினால் அடித்தான்.

அது அவரது உள்ளங்காலில் பட்டது. விரைந்து வந்த அவன் பீதாம்பரத்துடன் எட்டு கைகளுடன் ஒரு புருஷன் படுத்திருப்பதைக் கண்டான். யாரென்று தெரிந்ததும் கதறினான். அவனைத் தேற்றியபின் க்ருஷ்ணர் ஆகாயத்தை தன் சீர்மையால் வ்யாபித்து ஸ்வர்கம் ஏகினார். தேவர்களும் சித்தர்களும் அவரைக் கொண்டாடினர்.

இதனிடையில் தாருகன் அர்ஜுனனிடம் வ்ருஷ்ணி குல அழிவைப் பற்றி கூற மனம் வெதும்பி வஸுதேவரைக் காண வந்தான். அவனைக் கண்ட வஸுதேவர் அவனை ஆலிங்கனம் செய்து கொண்டு மிக வருத்தத்துடன் அவனிடம் மீதி இருக்கும் வ்ருஷ்ணிகளை நான் இந்த்ரப் ப்ரஸ்ததிற்கு அழைத்துச் செல்வேன். இந்த அனிருத்தனின் பிள்ளை வஜ்ரன் இனி நாட்டை ஆள்வான் என்றார். அதற்கு மறு நாள் அவரும் ஸ்வர்கம் ஏகினார்.

தன் சகா க்ருஷ்ணன் மறைந்ததை சற்றும் எதிர்பார்க்காத அர்ஜுனன் மிகவும் மனம் வருந்தினான். நீத்தார் கடன் முடிந்தபின் ஹஸ்தினாபுரம் செல்ல அவனை வ்ருஷ்ணிகுல பெண்கள் பின் தொடர்ந்தனர்.

அவனைத் தொடர்ந்து வ்ருஷ்ணிகுல பெண்கள் வெளியேறியதும் கடல் சீற்றத்துடன் த்வாரகைக்குள் புகுந்தது. கால வசத்தால் திருடர்கள் அந்த பெண்களின் ஆபரணங்களை பிடுங்கினர். அவர்களைக் காப்பாற்ற அர்ஜுனன் செய்த முயற்சிகள் வீணாயின. கலங்கிய மனதுடன் குருக்ஷேத்ரத்தில் நுழைந்த அவன் யுதிஷ்டிரரின் அனுமதியுடன் அவர்களை வெவ்வேறு இடங்களில் தங்க வைத்தான். அபோது அங்கு வந்த வ்யாஸரிடம் 'உளம் கவர் கள்வன், நீல மேக ஸ்யாமளன் செந்தாமரைக் கண்ணன் பலராமனுடன் ஸ்வர்கம் ஏகிவிட்டான். வ்ருஷ்ணி குலமும் அழிந்தது. க்ருஷ்ணரின் மறைவு என்னை மிகவும் பாதிக்கிறது. என்னால் நம்ப முடியவில்லை. கடல் வற்றுமா?

மந்தர மலை நகருமா? நெருப்பு குளிருமா? என்னால் நம்பமுடியவில்லை. க்ருஷ்ணன் இல்லாமல் இவ்வுலகில் இருக்கப் பிடிக்கவில்லை நான் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே என்னால் அடக்கப்பட்ட ஆபீரர்கள் பெண்களை கவர்ந்தனர். என்னால் நாண் பூட்ட முடியவில்லை. என் திறமை போய்விட்டது. நான் என்ன செய்ய வேண்டும் கூறுங்கள்'' என்று கூறி அழுதான்.

வ்யாஸர் 'இந்த வ்ருஷ்ணிகளும் தேவாம்சம் பெற்றவர்கள். க்ருஷ்ணருடன் சென்று விட்டனர். பூமியின் பாரத்தைக் குறைத்து தானும் ஸ்வர்கம் சென்றான் க்ருஷ்ணன். நீங்களும் ஒரு பெரிய கார்யத்தை செவ்வனே செய்து முடித்தீர்கள். காலம் தான் அனைத்துக்கும் காரணம். நீயும் மேல்லுலகம் செல்ல தருணம் வந்து விட்டது. அதுவே உனக்கு நல்லது'' என்றார்.

அர்ஜுனனும் அவர் கூறியவற்றை யுதிஷ்டிரரிடம் கூற இருவரும் மௌனத்தில் ஆழ்ந்தனர்.

மௌசல பர்வம் முற்றும்

**செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்**
**செயற்கரிய செய்கலா தார்**

*மக்கள் செய்வதற்கு (உடலையும், உள்ளத்தையும் கடடுப்படுத்துகின்ற பொறுப்பான) அரிய செயலை செய்கின்றவர்களே உயர்ந்தோர் என்று அறிஞர்களால் போற்றப்படுவர். மக்கள் செய்வதற்கு அரிய இந்தச் செயலை ஆர்வத்துடன் மேற்கொள்ளாதவர்கள் அறிஞர்களால் உயர்ந்தவர்களாகக் கருதப்படமாட்டார்கள். (ஐம்பொறிகளை வெல்பவன் பிறவியை உயர்த்தியவன். ஐம்பொறிகளை வெல்லாதவன் பிறவியைத் தாழ்த்தியவன் என்பது கருத்து)*

*(குறள் : 26)*

*பரமேச்வரன் இந்த்ரியங்களை வெளிநோக்கு உடையவனாகப் படைத்துள்ளார். ஆகையால் மனிதன் வெளி விஷயங்களையே பார்க்கிறான். எவனோ ஒரு தீரன் சாகாநிலையை விரும்பி, இந்த்ரியங்களை அடக்கி உள்முகமாய்த் திரும்பப் பெற்ற பார்வை உடையவனாய் தன்னைப் பார்க்கிறான்.*

*(கடோபநிஷத் 4 - 1)*

# மூக ஸாரம்

இராமாயணம் ஸ்ரீநிவாஸன்

காஞ்சீ மடத்தை அலங்கரித்த ஸ்ரீ மூக கவியினால் இயற்றப்பட்ட மூக பஞ்சசதியை எல்லாரும் அறிவர். காமாக்ஷியின் புகழை பல விதமாக அதில் கவி கூறியிருப்பார் புலமை சிறந்த கற்பனை வளம், உயர்ந்த பக்தி இலக்கியமாக மிளிர்கிறது மூக பஞ்சசதி. அந்த ஐநூறு ஸ்லோகங்களிலிருந்து சில முக்யமான ஸ்லோகங்களை ‘மூக ஸாரம்‘ என்னும் தலைப்பில் மறைந்த ஸ்ரீ ராமாயணம் ஸ்ரீநிவாசன் தொகுத்து அருளியுள்ளார். பொருள் உணர்ந்து பாரயணம் செய்வோம்.

**कैवल्यदाय करुणारस किन्कराय**
**कामाक्षि कन्दलित लत विभ्रमशन्कराय**
**आलोकनाय तव भक्त शिवन्कराय**
**मार्त नमोस्तु परतन्त्रित शन्कराय**

**कटाक्ष शतकम् ।। १६**

**கைவல்ய தாய கருணாரஸ கிங்கராய**
**காமாக்ஷி கந்தலித விப்ரம சங்கராய**
**ஆலோகனாய தவ பக்த ஸிவங்கராய**
**மாதர் நமோஸ்து பரதந்த்ரித ஸங்கராய (கடாக்ஷ சதகம் 47)**

காமாக்ஷி தேவி! கவல்யத்தைக் கொடுப்பதும், கருணா ரஸத்தை ஏவலாளாக உடையதும், சங்கரருக்கு காதலை பெருக்குவதும்,அதனால் சங்கரரை தனக்கு ஆட்பட்டவரகச் செய்து கொண்டதும் பக்தர்களுக்கு மங்கலங்களை அருளுவதுமான உனது கடாக்ஷத்திற்கு எமது நமஸ்காரங்கள். செய்வதாக.

सम्सारकर्म परितापजुषाम् नराणाम्
कामाक्षि शीतलतराणि तवेक्षितानि
चन्द्रापन्ति घन चन्दन कर्दमन्ति
मुक्तागुणन्ति हिमवारि निसेषचनन्ति ॥ ७७ ॥

कटाक्ष शतकम् ॥ ७७

ஸம்ஸாரகர்ம பரிதாப ஜுஷாம் நராணாம்
காமாக்ஷி சீதலதராணி தவேக்ஷிதானி
சந்த்ராதபந்தி கன சந்தன கர்தமந்தி
முக்தாகுணந்தி ஹிமவாரி நிஸேஷசனந்தி (கடாக்ஷ சதகம்77

ஹே காமாக்ஷி! ஸம்ஸாரம் என்னும் கோடையில் மனிதர்களுக்கு உனது கண்ணோக்கங்கள் நிலாவாகின்றன, சந்தனச் சேறாகின்றன, முத்தின் குளிர்ச்சியும் மகிழ்ச்சியையும் தருகின்றன. பனி நீரைத் தெளிப்பதாகின்றன.

बाणेन पुष्प धनुष: परिकल्प्यमान
त्राणेन भक्त मनसामब करुणाकरेण
कोणेन कोमलदृशस्तव कामकोटि
शोणेन शोषय शिवे मम शोक सिन्धुम्

कटाक्ष शतकम् ॥ ७७

பாணேன புஷ்பதனுஷ:பரிகல்ப்யமான
த்ராணேன பக்த மனஸாம் கருணாகரேண
கோணேன கோமளத்ருஸஸ்தவ காமகோடி
சோணேன சோஷய சிவே மம சோக ஸிந்தும்

(கடாக்ஷ சதகம் 94)

ஹே சிவே! காமகோடி! உனது கடாக்ஷம் மன்மதனின் பாணமாகிறது, கருணையால் பக்தர்கள் மனதைக் காக்கிறது, கருணைக்குப் பிறப்பிடமாக உள்ளது. அது என்னுடைய சோகக் கடலை வற்றச் செய்யட்டும்.

(தொடரும்)